Registered as a Newspaper. பக்கங்கள்: பத்து

விலை ரூபா 10.00

நமது
# ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ்.நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SP சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 ஆனி 20 ஹிஜ்ரி 1427 ஜ ஆகிர் 06 (05.07.2006) புதன்கிழமை இதழ் 277

## வரதர் அணி உறுப்பினர் குருநகரில் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம்—

யாழ்ப்பாணம்-குருநகரில் ஈ.பி.ஆர்.எல்.எப் வரதர் அணியைச் சேர்ந்த ஒருவர் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் சுட் டுக்கொல்லப்பட்டார்.

யாழ்ப்பாணம் - மத்தியூஸ் வீதியைச் சேர்ந்த திருமேனி அரியரட்ணம் லிங்டன் (வயது 34) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இந்தச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது-

நேற்று முன்தினம் இரவு மேற்படி நபரை கூட்டிச்சென்ற இனந்தெரியாத நபர்கள் யாழ். குருநகர் பெரியகோயிலுக்குப் பின்புறமாகவுள்ள பொதுக்கிணற்றடியில் வைத்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

# இன்று கரும்புலிகள் தினம் எழுச்சியுடன் அனுஷ்டிப்பு!

கிளிநொச்சி—

தாயக விடுதலைக்காக உயிராயுதங்களாக தம்மை அர்ப்பணித்து வீரகாவியமான கரும்புலி மாவீரர்களை நினைவுகூரும் கரும்புலிகள் நாள் இன்று உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதனையொட்டி தாயகமெங்கும் எழுச்சிக்கோலம் பூண்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் கரும்புலிகள் நாளை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகளை கரும்புலிகள் நாள் ஏற்பாட்டுக் குழுவினர் ஒழுங்கு செய்துள்ளனர்.

தாயகப் பிரதேசங்களில் சிவப்பு-மஞ்சள் கொடிகள் பறக்கவிடப்பட்டு, கரும்புலிகளை நினைவுகூரும் அலங்கார வளைவுகள் வீதிகளுக்கு குறுக்காக கட்டப்பட்டு, பொதுஇடங்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் கரும்புலி மாவீரர்களின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு கரும்புலிகள் நாள் நினைவு கூறப்படுகிறது.

அத்துடன், கரும்புலி மாவீரர்களின் திருவுருவப்படங்களைத் தாங்கிய ஊர்தி பவனிகள் தாயகமெங்கும் உலாவருகின்றன.

கரும்புலி மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு பல்வேறு இடங்களிலும் நேற்று நடைபெற்றது. இன்றும் இந்த நிகழ்வுகள் பிரதேச ரீதியாக நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கரும்புலிகள் நாள் ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை 9 மணியளவில் பளை நகரில் கரும்புலிகள் நாள் நிகழ்வுகள் பளை கோட்ட பொறுப்பாளர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# நாடெங்கும் பாதுகாப்பு தீவிரம்
# உஷார் நிலையில் படையினர்!

கொழும்பு—

இன்று தமிழீழ விடுதலைப் புலிகளால் கரும்புலிகள் தினம் அனுஷ்டிக்கப்படுவதை முன்னிட்டு - இலங்கைத்தீவு முழுவதும் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

எல்லாவிதமான பாதுகாப்பு ஏற்பாடுகளும் தீவிரப்படுத்தப் படுத்தப்பட்டிருப்பதாகவும், கரும்புலிகள் தினத்தில் வன்முறைச் சம்பவங்கள், தாக்குதல்கள் இடம்பெறக் கூடும் என எதிர்பார்த்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பில் ஆயிரக்கணக்கான முப்படையினரும், பொலிஸாரும் பாதுகாப்புக் கடமைகளுக்காக

(10 ஆம் பக்கம் பார்க்க)



## முஸ்லிம் இளைஞர் சுட்டுக்கொலை

திருகோணமலை—

திருகோணமலை - மட்கோ பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு முஸ்லிம் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மட்கோவில் உள்ள தனது வீட்டில் இருந்தபோது மொகமட் அலி (வயது 24) என்ற இளைஞரே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

மேற்படி இளைஞனின் சடலம் தற்போது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை மீறல்களில்

## புலிகளை மீண்டும் பேச்சுக்கு

# மனித உரிமை மீறல்களில் படையினரும், பொலிஸாரும்

## கட்டுப்படுத்தக் கோருகிறார் மகிந்த

கொழும்பு—

கைது செய்யப்பட்டவர்களின் அடிப்படை மனித உரிமைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொலிஸார் மற்றும் படையினரிடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கோரியுள்ளார்.

நாட்டில் சந்தேகத்தின் பேரில் மற்றும் வேறு காரணங்களுக்காக கைது செய்வோரை பொலிஸாரும், படையினரும் மனிதாபிமான முறையில் நடத்துவதுடன் - அடிப்படை மனித உரிமைகளையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு தமது பணிகளை மேற்கொள்வ தற்கு ஏற்ற வகையில் படையினரும், பொலிஸாரும் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

சட்டதிட்டத்துக்கு அமைவாக கைதுசெய்வதற்கும்,

(10 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளை மீண்டும் பேச்சுக்கு அழைக்கிறார் ஜனாதிபதி மகிந்த

கொழும்பு—


இலங்கை அரசாங்கத்துடன் பேச்சு நடத்த விடுதலைப்புலிகள் முன்வர வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தியத் தொலைக்காட்சியான என்.டி.ரிவிக்கு அவர் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது-

யார் கருணா? முன்னைய ஒஸ்லோ மற்றும் ஜெனிவா பேச்சுக்களில் விடுதலைப்புலிகள் சார்பாக கருணாவும் பங்கேற்றார். அவர் விடுதலைப்புலிகளிடமிருந்து பிரிந்து செயற்படுகிறார். எமது கட்டுப்பாட்டுப்பகுதியில் எவரையும் செயற்பட நாம் அனுமதிக்கவில்லை.

கருணா குழுவோ, அல்லது விடுதலைப்புலிகளுக்கு மாற்றான எந்த அமைப்போ ஆயுதங்களுடன்

(10 ஆம் பக்கம் பார்க்க)





இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பு மீளவும் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருவதைப் படத்தில் காணலாம்.

# பெண்கள் மீதான வன்முறைக்கு எதிராக சுவிற்சலாந்தில் கவனயீர்ப்பு போராட்டம்

சூரிச்—

தமிழ்ப் பெண்கள் மீதான வன்முறைகளைத் தடுக்க சுவிற்சலாந்து அரசும், யுனிசெப் நிறுவனமும் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி சுவிற்சலாந்து - சூரிச் மாநிலத்தில் நேற்று தமிழ்ப் பெண்கள் அமைப்பால் கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் சுவிற்சலாந்தின் தலைமைச் செயலக நிறைவேற்றுப் பணிப்பாளர் அலெக்சான்றா றொசெற்றியிடம் சுவிற்சலாந்து தமிழ்ப் பெண்கள் அமைப்பின் தலைவர் புஸ்பராணி

(10 ஆம் பக்கம் பார்க்க)




# அவசரகாலச் சட்டத்தை எதிர்க்க ஐ.தே.க முடிவு

கொழும்பு—

அவசர காலசட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்கப் போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற குழுக்கூட்டம் நேற்று நடைபெற்றபோதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக கட்சியின் தலைவர் தெரிவித்தார்.

அரசாங்கம் அவசரகால தடைச்சட்டத்தின் மூலம் நாட்டைப் பாதுகாப்பதை தவிர்த்து - தமது குடும்பங்களை பாதுகாப்பதற்காக சட்டத்தைச் சாதகமாக பயன்படுத்துகின்றார்கள்.

அரசாங்கம் - நோர்வேயின் உதவி யின்றி விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும்

(10 ஆம் பக்கம் பார்க்க)




# தவம், யோகம், ஞானம்: FIFA

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் இறுதிக்கட்டத்தை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கும் இந்தவேளையில் இவர்கள் பட்ட, படும், படப்போகும் துன்பங்களுக்கு ரசிகர்களின் ஆதரவு என்ற மகத்தான வெகுமதிக்கப்பால் வேறொன்றும் இருக்கிறது. அதுவும் மிக அவசியமான பணவெகுமதிதான்.

வெற்றிக்கிண்ணத்தை முத்தமிடும் அணி அத்துடன் சேர்த்து 15.6 மில்லியன் யூரோக்களையும், இரண்டாவது இடம்பெறும் அணி 14.6 மில்லியன் யூரோக்களையும் பெறும். மூன்றாம் நான்காம் இடங்களைப் பெறும் அணிகள் 13.9 மில்லியன் யூரோக்களையும் பெற்றுக்கொள்வார்கள்.

காலிறுதிப்போட்டி அணிகள் 7.5 மில்லியன் யூரோக்களையும், ROUND OF SIXTEEN உடன் விடைபெற்றோர் 5.5 மில்லியன் யூரோக்களையும் மற்றும் பதினேழாம் இடத்தில் இருந்து 32 ஆம் இடம்வரை பெறும் அணிகள் 3.9 மில்லியன் யூரோக்களையும் பெறுவர் (இலங்கைப்பெறுமதியில் 1 யூரோ 131 ரூபா என்றால் பரிசின் பெறுமதியை நீங்களே கணக்கிட்டுக்கொள்ளுங்கள்)

இது மட்டமல்ல, ஒவ்வொரு அணியினதும் விமானப்பயணம் உட்பட சகல போக்குவரத்து செலவுகளையும் FIFA ஏற்றுக்கொள்கிறது. ஒரு தேசிய அணிக்குழுவில் பங்கு கொள்வோர் மாத்திரம் 45 பேர் என்று மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதோடு ஜேர்மனியில் நிற்கும் ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொரு வீரருக்கும் poket money யாக 295 யூரோக்களும் வழங்கப்படுகின்றன.

FIFA உலகத்திருவிழா எவ்வளவு முதலீட்டுடன் நடாத்தப்படுகிறது என்பது இதிலிருந்து நன்கு புரியும்.



மேலும் எல்லாவற்றையும் FIFA ஏற்றுக்கொள்வதால் அணிகள் வெற்றியைத் தவிர, வேறொன்றையும் யோசித்து அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. என்றாலும், இங்கு பணப் பெறுமதியென்பது இரண்டாம் பட்சம் என்பதுதான் உண்மை.

ஏனெனில், உலகின் ஒவ்வொரு அணியும் FIFA உலகக்கிண்ணப் போட்டிகளில் பங்குகொள்ளவேண்டும் என்று ஆசைப்படுவது பணத்துக்காகவல்ல. FIFA பங்கேற்பின் மகத்துவத்துக்கும், பெருமைக்கும்தான்.

வாழ்வில் ஒவ்வொரு அணியின் பிரார்த்தனையும் FIFA தான். அதற்காக அவர்கள் எந்த விலையையும் கொடுக்கத்தயாரென்றால் இந்தப் பண ஊக்குவிப்பு இரண்டாம் பட்சம் தான்.

## இன்றைய ஆட்டம்

**அரையிறுதியாட்டம்**

பிரான்ஸ் - போர்த்துக்கல் (மியூனிச் 12.30)


# புதிய பறவை எது?

இங்கிலாந்து நாட்டின் உதைபந்தாட்ட அணித்தலைவர் டேவிட் பெக்கம் தான் பதவி விலகுவதாக அறிவித்துள்ள இந்த வேளையில், இங்கிலாந்து அணியின் அடுத்த தலைவர் யார் என்று தீர்மானிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஜோண் ரெரி இங்கிலாந்து அணியின் பின்கள பாதுகாப்பு வீரர். இவர் இங்கிலாந்தின் செல்ஸீ கழக வீரர். இந்தக் கழகத்தின் முகாமையாளர் கிரஹாம் டெய்லர் ஜோண் ரெரியே இங்கிலாந்து அணியின் அடுத்த தலைவராக நியமிக்கப்படவேண்டும் என்கிறார்.

இதேவேளை, இங்கிலாந்தின் முன்னாள் அணித்தலைவர் ரெரி புச்சர் லிவர்பூல் கழகத்தின் மத்திய வரிசை ஆட்டக்காரர் ஸ்ரீபன் ஜெராட்தான் அடுத்த அணித்தலைவர் பதவியைப் பெறவேண்டுமென்று விரும்புகின்றார்.

நடைபெற்ற நிகழ்வுகளைச் சரியாக அவதானித்திருந்தால் சகல வகையிலும் ஜோண் ரெரியே பொருத்தமானவர் என்று ரெய்லர் வாதிட, அப்படியல்ல






தற்போதைய நிலையில் அனுபவம் நிறைந்தவர் ஸ்ரீபன் ஜெராட்தான். அவருக்கே அணித்தலைவர் பதவியின் அழுத்தத்தைச் சமாளிக்கும் ஆற்றல் இருக்கிறது என்கிறார் புச்சர்.

மேலும் அவர் தொடர்ந்து கருத்துக் கூறுகையில் - கெரி நெவில் கூடத் திறமையானவர்தான். ஆனால், தற்போது தற்காலிக அணித்தலைவர் ஒருவர் தேவைப்படும் நிலையில் அவர் பயன்படுத்தப்படலாம். நிரந்தரத் தலைவர் என்பவர் 2008 ஐரோப்பியக் கிண்ணம், 2010 உலகக்கிண்ணப் போட்டிகள் இரண்டையும் கருத்திற்கொண்டு தெரிவு செய்யப்படவேண்டும். அப்படி ஒரு நிலையில் ஜெராட்டைத்தவிர, வேறு யாரும் பொருத்தமாகத் தெரியவில்லை என்கிறார்.

விலகிச்செல்லும் பெக்கம் - கடந்த ஆறு வருடங்கள் இங்கிலாந்தின் அணித்தலைவராக இருந்தவர். FIFA 2006 காலிறுப்போட்டித் தோல்வியைத் தொடர்ந்து அவர் தவி துறக்கிறார்.

டேவிட் பெக்கம் ஸ்பானிய புகழ்பூத்த ரியல்மட்ரிட் கழக உதைபந்தாட் அணியின் ஒரு முக்கிய வீரர். இவரது கழக ஏனைய வீரர்கள் றொனால்டே சினேடின் சிடேன், போர்த்துக்கல் அணித்தலைவர் பியூகோ பொன்றவர்கள். அப்படியென்றால் பெக்கத்தின் பணப்பெறுமதி என்ன? மனப்பெறுமதி என்ன?

## உதறிவிட்டு எழுந்து பாய்



கார்லோஸ் அல்பேட்டோ பெரெய்ரா இன்று உலகின் முதல் சோகமான மனிதன். இவர் பிரேசில் அணியின் பயிற்றுனர் என்பதற்கு அறிமுகம் தேவையில்லை. பொதுவாக உலகக்கிண்ணப் பயணம் தடைப்பட்டால் பலியாக்கப்படுபவர் அந்த அணியின் பயிற்றுனர்தான். இது பிரேசில் உதைபந்தாட்டப் பாரம்பரியம் என்றும் சொல்லப்படுகிறது.

ஆனால், அல்பேட்டோ பெரெய்ரா வேறுவிதமாக யோசிக்கிறார். தான் எந்த முடிவையும் எடுக்க அவசரப்படவில்லை என்கிறார். பிரேசில் உதைபந்தாட்ட சங்கம் (CBF) இவரின் எதிர்காலம் பற்றி யோசிக்கத் தொடங்கியுள்ள வேளையில் இவர் CBF தலைவர் ரிக்கார்டோ ரியெக்சீரியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்போவதாகக் கூறியுள்ளார்.

எனினும், தலைவர் மீதான நட்பின் காரணமாக அவருடன் கலந்துரையாடிய பின்னரே நான் ஒரு முடிவு எடுப்பேன் என்கிறார். எல்லோருமே சோகமாக இருக்கிறார்கள். ஆனால், என்னை விடச் சோகமாக யாரும் இல்லையென்றே நான் சொல்வேன். இதெல்லாம் வாழ்வியலில் விளையாட்டில் ஒரு பகுதிதான். ஆனால் மனம் பொறுக்குதில்லையே என்கிறார். 1994 இல் பிரேசில் இத்தாலியைத் தோற்கடித்தபோது இவரே பிரேசில் அணியின் ஆசான். தற்போது பிரேசிலுக்கு மூன்றாவது தடவையாக பயிற்றுனராக உள்ளார்.

இந்த நோவு மாறாது. இன்னொரு முறை பிரேசில் உலக்கிண்ணத்தை வென்றெடுக்கும் வரை. அது அனேகமாக 2010 ஆம் ஆண்டாக இருக்கலாம் என்கிறார் அல்பேட்டோ பெரெய்ரா. உண்மையில் பிரேசில் எப்படித் தோற்கமுடியும் என்று இன்றுவரை யாராலும் பதில் கண்டுபிடிக்க முடியவில்லை. அதற்கான பதிலையும் இன்னும் நவீன வியூகங்களையும் பிரேசில் ஒன்றினைக்குமாயின் தென்ஆபிரிக்க FIFA 2010 பிரேசிலுக்குத்தான் என்று நிச்சயம் நம்புகிறார் பெரெய்ரா. அப்படி நம்பும் தகுதியும் திறமையும் அவரிடம் நிரம்பவே உள்ளது.

# திருந்தாத விளையாட்டுப்பிள்ளை





இங்கிலாந்துக்கும், போர்த்துக்கல் நாட்டுக்கும் எதிரான போட்டியில் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்ட இங்கிலாந்து அணிவீரர் வெய்ன் ரூணி தனது பக்க நியாயங்களை எடுத்துக்கூற வியாழன்வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

ஆட்டத்தின் அறுபத்தியிரண்டாவது நிமிடத்தில் போர்த்துக்கல் பின்கள வீரர் ரிக்கார்டோ காவால்ஹோவை மிதித்ததன் தொடர்பில் இவர் வெளியேற்றப்பட்டார். இந்தச் சம்பவத்தின் போது கிறிஸ்ரியானோ றொனால்டோவையும் வெறுப்புடன் தள்ளி விட்டார் ரூணி.

ரூணி நடந்துகொண்ட பொருத்தமற்ற முறை பற்றி மத்தியஸ்தரிடம் கருத்தேற்றம் செய்வதுபோல கிறிஸ்ரியானோ றொனால்டோ நடந்து கொண்டார் என்றும் கூறப்படுகிறது. இதனை கிறிஸ்ரியானோ மறுத்துள்ளார்.

இங்கிலாந்து வீரர் மீது விசாரணை எந்தத் திசையில் நடைபெறும் என்பது இன்னும் விளங்காத புதிராக இருக்கிறது. கார்வால் ஹோவை பிரத்தியேக இடத்தில் கொடூரமாக மிதித்தமைக்காக இவர் வெளியேற்றப்பட்டார். அல்லது கிறிஸ்ரியானோ றொனால்டோவை முரட்டுத்தனமாகத் தள்ளிவிட்டமைக்காக வெளியேற்றப்பட்டார் என்பது இன்னமும் சரியாகத் தெரியவரவில்லை.

இங்கிலாந்து பயிற்றுனர் எரிக்சனின் கருத்துப்படி மிதித்த சம்பவம் தொடர்பிலேயே ரூணி வெளியேற்றப்பட்டார் என்று நம்புகின்றார்.



உத்தியோகத்தர்களின் கருத்துப்படி சிவப்பு அட்டை காட்டப்பட்டதால் இது ஒரு ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்பட்ட விடயம். இவர் முறையான விளக்கத்துக்கு உட்பட வேண்டும் என விரும்புகின்றனர்.


எரிக்சன், ரூணி மீது மிகுந்த பிரியம் கொண்டவர். உலகக் கிண்ணத்துக்கு முற்பட்ட காலத்தில் ரூணிக்காக டேவிட் பெக்கமை ஓரம்கட்ட முயன்ற சம்பவங்களும் உண்டு. ரூணிக்கு எதிரான விமர்சனங்களை ரூணி மீது தயவு காட்டும்படி கெஞ்சுகிறார் எரிக்சன்.

மேலும் இப்போது அவருக்கு எதிரான நடவடிக்கைகளை எடுத்தால் 2008ல் நடைபெறவிருக்கும் ஐரோப்பியக் கிண்ணட் போட்டிகளில் அவரை இழக்கவேண்டி ஏற்பட்டு விடும் என்றும் கூறுகிறார்.

முன்னாள் இங்கிலாந்தின் அணித்தலைவர் பொலி ஹிப்சன் கருத்துக் கூறும்போது - ரூணிக்கு ஆதரவு கொடுக்கக்கூடிய முன்னணி வீரர்கள் இருந்திருந்தால் அவருக்கு இந்தநிலை ஏற்பட்டிருக்காது. தனித்துப் போராடும் நிலையிலேயே இப்படி ஒரு சம்பவம் ஏற்பட்டுள்ளது. அவர் உணர்ச்சி மிகுதியில் தனது சமநிலையை இழந்துவிட்டார்.

மேலும் இளமையானவரும்கூட. ஆனாலும், ஒரு அதிஅற்புதமான வீரனை அவர் தன்னகத்தே கொண்டுள்ளார். அவர் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்கிறார். ரூணியின் உதைபந்தாட்ட வாழ்க்கை நிரம்பவே சர்ச்சைகள் கொண்டது. எல்லோரும் அவர் திருந்துவார் என்கிறார்கள். ஆனால், அவர் திருந்தியபாடில்லை போலத்தான் தெரிகிறது.

# தேசிய பாதுகாப்புத் தொடர்பாக இலங்கை தோல்வியடைந்த நாடு



## ஆதங்கம் தெரிவிக்கிறார் ஜே.வி.பியின் விமல் வீரவன்ச

கொழும்பு —

இலங்கை போன்று தேசிய பாதுகாப்பு கேலிக்கிடமாகியுள்ள ஒரு நாடு உலகில் வேறெங்கும் இல்லையென ஜே.வி.பி யின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

அண்மையில் நீர்கொழும்பு கடற் பிரதேசத்தில் விமானத்திலிருந்து வெளியான சத்தம் குண்டு வெடிப்பென தனியார் வானொலிகள் தெரிவித்தன.

இது தொடர்பாக படைத்தரப்பிடம் கேட்டறியாமல் இதுபோன்ற செய்திகளை வெளியிட்டு முழு நாட்டையும் சிக்கலுக்குள்ளாக்குகின்றனர். இது பாரதூரமான பிரச்சினையாகும். இந்த நாட்டில் நிகழும் அனர்த்தங்களை முன்கூட்டியே தெரிந்து கொள்ளக் கூடிய ஒரே கட்சி ஜே.வி.பி ஆகும். ஜே.வி.பியை முன்னர் தடைசெய்த போதிலும் நாம் சுவரொட்டிகளை ஒட்டி நாட்டுக்கு ஏற்படப்போகும் பின்னடைவுகள் குறித்து மக்களுக்கு அறிவுறுத்தினோம்.

ரணில் விக்கிரமசிங்கவின் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் நாட்டு மக்களுக்கு மிகப் பெரிய தீங்குகள் நிகழலாமென நாம் கூறினோம். இன்று அது நிதர்சனமாகியுள்ளது.

பேள்ஸ் குறூஸ் கப்பலைத் தாக்குவதற்கு வந்த புலிகள், தமது கடல் அதிகாரத்தை காண்பிப்பதற்கு வந்ததாகக் கூறியது அதனாலேயே. அவர்களுக்கு கடல் எல்லை மட்டுமல்ல, ஆகாய எல்லையும் உரிமையென தமிழ்ச்செல்வன் அறிக்கை வெளியிட்டதும், இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் புலிகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தினாலேயே.

தமது பணி முடிந்து விடுமுறையில் நிராயுதபாணிகளாக வீடு செல்லும் இராணுவத்தினரை இன்று புலிகள் கொல்வதும், அந்தக் கொலைகளை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு நியாயப்படுத்துவதும் இந்த ஒப்பந்தத்தினாலேயே.

இந்தப் பின்னடைவை இதற்கு முன் நாம் தெரிவித்தோம். ஜே.வி.பி வரலாற்றில் முதற்தடவையாக வேறொரு கட்சியுடன் கூட்டணி வைத்ததும், வேறொரு கட்சியின் வேட்பாளரை ஜனாதிபதியாக்குமாறு மக்களுக்குக் கூறியதும் நாடு எதிர்நோக்கியுள்ள சவாலைத் தெரிந்து கொண்டமையினாலேயே.

நாடு எதிர்நோக்கியுள்ள சவால்களை கண்டமையினாலேயே 2005 ஆம் ஆண்டு அரசாங்கத்தை விட்டு ஜே.வி.பி. வெளியேறியது.

அப்போது ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா புலிகளுக்கு சுனாமி நிவாரணசபையை வழங்க முன்வந்திருந்தார்.

ஜனாதிபதி சந்திரிகா புலிகளுக்கு அதனை அன்று வழங்கியிருந்தால் அவர்களுக்கு தனியான நிர்வாகப் பிரதேசம் கிடைத்திருக்கும். அவ்வாறு நிகழ்ந்திருந்தால் சட்டமா அதிபர், படைத் தளபதி, தேர்தல் ஆணையாளர் உட்பட பொறுப்பு வாய்ந்த பல பிரிவுகள் புலிகளால் அமைக்கப்பட்டு வேறொரு இராஜ்ஜியம் அமைக்கப்பட்டு முடிந்திருக்கும்.

ஜே.வி.பி. உயர்நீதிமன்றத்துக்குச் சென்று ஜனாதிபதி சந்திரிகாவின் அந்தச் செயலை பின்பக்கமாகத் திருப்பிக்கொண்டது.

எங்களது பாதுகாப்பு நிலைமை உடைந்து விழுந்துவிட்டது என்பதை உலகுக்குக் காட்டுவதற்குத்தான் இராணுவ அதிகாரிகளை புலிகள் கொலை செய்துவருகின்றனர். இராணுவ உளவுப் பிரிவை அழிக்கின்றனர்.

இராணுவத்தை மட்டுமல்ல ஜனாதிபதியைக் கொலை செய்தாவது தோல்வியடைந்த நாடு இலங்கை எனக் காண்பித்து தமது நோக்கத்தை அவர்கள் நிறைவேற்றிக்கொள்வார்கள்.

எனவே, இவற்றை தெளிவாகத் தெரிந்துகொண்டு ஜே.வி.பியினராகிய நாங்கள் நாட்டைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுப்போமென அவர் மேலும் தெரிவித்தார். (தே)

## பொன்சேகா மீதான தாக்குதல்; பல தகவல்கள் கண்டுபிடிப்பாம்!

கொழும்பு —

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகாவை இலக்குவைத்து இராணுவத் தலைமையகத்தில் தற்கொலைத் தாக்குதல் மேற்கொண்ட பெண்ணை வழிநடத்தியதாகக் கூறப்படும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் குறித்த பல தகவல்கள் இரகசிய பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கிடைத்த தகவல்களுக்கமைய சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும், அவர்கள் தொடர்ந்து விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் இரகசிய பொலிஸ் பிரிவின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கம்பகா, வல்வேவல உட்பட பல பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது இந்தச் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டதாகவும், இந்தத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை விரைவில் முடிவுக்குக் கொண்டு வந்து, சந்தேக நபர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யமுடியுமெனத் தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

இராணுவத் தளபதியை இலக்குவைத்து தற்கொலைத் தாக்குதல் மேற்கொண்ட பெண் பயன்படுத்தியதாகக் கூறப்படும் கையடக்கத் தொலை பேசி ஊடாக இதுவரை விசாரணைகள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன. (தே)

## பரமி குலதுங்க மீதான தற்கொலைத் தாக்குதல்: மோட்டார் சைக்கிளை வாங்கியவர் இனங்காணப்பட்டதாக தெரிவிப்பு!

கொழும்பு —

இராணுவப் பிரதித் தலைமை அதிகாரி லெப். ஜெனரல் பரமி குலதுங்கவை இலக்குவைத்து தாக்குதல் மேற்கொண்ட தற்கொலையாளி பயன்படுத்திய மோட்டார் சைக்கிளை - வத்தளை மாங்கோலை பிரதேசத்தில் வசித்தவரிடமிருந்து வாங்கிய விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர் எவரென்பதை கொழும்பு குற்றவியல் தடுப்புப் பிரிவினர் கண்டுபிடித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வன்னியிலுள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் வசிக்கும் இவர், அடிக்கடி கொழும்பு வந்து செல்வதாகவும், கொழும்பு - கொட்டாஞ்சேனை பகுதியை தற்காலிக வசிப்பிடமாகக் கொண்டவரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, பரமி குலதுங்க மீதான தற்கொலைத் தாக்குதலுக்கு திட்டச் செயற்பாட்டாளராக இவர் இருந்திருக்கலாமென சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவர் இந்த மோட்டார் சைக்கிளை தனது தற்காலிக வசிப்பிடத்திலிருந்தே பெற்றுக்கொண்டதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாகவும் அறியவருகிறது. (தே)

## கற்பிட்டி கடற்பிரதேசத்தில் மர்மப் படகுகள் நடமாட்டம்!

கொழும்பு —

புத்தளம் - கற்பிட்டி மற்றும் சிலாபம் கடற்பிரதேசத்தில் பயணிக்கும் சில மர்மப்படகுகள் குறித்து பிரதேச மீனவர்கள் படையினரிடம் முறையிட்டுள்ளனர்.

கடந்த 30 ஆம் திகதி இரவு 10.30 மணியளவில் கற்பிட்டி வடபகுதியிலிருந்து கற்பிட்டி களப்பினூடாக புத்தளம் களப்புக்குச் சென்ற 10 படகுகளை அவதானித்த அந்தப் பிரதேச மீனவர்கள், அதுகுறித்து பொலிஸாரிடம் தெரிவித்ததையடுத்து அந்தப் படகுகளை பொலிஸார் கண்காணித்துள்ளனர்.

அந்தக் காலப்பகுதியில் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக இரவு நேரங்களில் மீனவர்கள் கடலுக்கோ, களப்புக்கோ செல்லாததால் இந்தப் படகுகள் யாருக்குச் சொந்தமானவை என்பது குறித்து படைத்தரப்புக்குச் சந்தேகம் எழுந்துள்ளது.

கற்பிட்டிக்கு வடக்கேயுள்ள ஒரபே தீவுக்கு அருகே நிறுத்திவைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் 4 படகுகள் குறித்தும் விமானப்படையினர் கற்பிட்டி பொலிஸாருக்கும், கடற்படைக்கும் அறிவுறுத்தியுள்ளனர்.

உடனடியாக அந்தப் பிரதேசத்தில் தேடுதல் நடத்தப்பட்டபோதிலும் விமானப் படையினரால் அவதானிக்கப்பட்ட படகுகள் தப்பிச்சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது.

சிலாபம் - அம்பகந்தவில கடற்பிரதேசத்தில் மிதப்பதாகக் கூறப்பட்ட றோலர் படகு குறித்து பிரதேச மீனவர்களால் படையினருக்கும், பொலிஸாருக்கும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த முதலாம் திகதி மாலை 5 மணியளவில் அம்பகந்தவில கடற்பரப்பிலிருந்து ஒரு கிலோமீற்றர் தொலைவில் படகு ஒன்றைக் கண்டதாகவும் - அதில் சிலர் இருந்ததைத் தங்களால் பார்க்கக் கூடியதாக இருந்ததாகவும் அந்தப் பிரதேசத்திலுள்ள மீனவர்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

அதிகாலை 1.30 மணியளவில் மற்றொரு றோலர் படகு மூலம் அந்தப் படகு இழுத்துச் செல்லப்பட்டுள்ளது.

கடலில் மிதந்த படகு குறித்து கடற்படைக்கு சிலாபம் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டபோதும், அந்தப் படகு எடுத்துச் செல்லப்படும்வரை எவரும் அந்த இடத்துக்குச் செல்லவில்லை எனக் கூறப்படுகிறது.

கொழும்பிலிருந்து கற்பிட்டிவரையான கடற்பிரதேசத்தில் நடைபெறும் எந்தவொரு செயற்பாடுகளையும் சோதனையிடுவதற்கு தங்களுக்கு வசதிகள் இல்லை என்றும், தங்களால் இயன்றது கடற்படையினருக்குத் தெரியப்படுத்துவது மட்டுமே என்றும் சிலாபம் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

## கடற்புலிகளின் படகுகளால் பொலிஸாரின் பயணம் தடை

கொழும்பு —

கற்பிட்டியிலிருந்து பள்ளியவத்தை பொலிஸ் நிலையத்துக்கு படகு மூலம் சென்ற 40 இற்கும் மேற்பட்ட பொலிஸார் - கதிரமலை கடற்பகுதியில் விடுதலைப் புலிகளின் படகுகள் நிற்பதைக் கண்டதால் தமது பயணத்தை இடைநிறுத்தி, மீண்டும் கற்பிட்டிக்குத் திரும்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸார் பயணம் செய்த இந்தப் படகுக்கு பாதுகாப்பு வழங்கத் தேவையான பாதுகாப்புப் படகுகள் இல்லாததால் இந்த நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸார் பயணம் செய்த படகுக்கு பாதுகாப்பு வழங்க ஒரு படகு மட்டுமே பயன்படுத்தப்பட்டது. கற்பிட்டி பொலிஸாரின் போக்குவரத்துக்கு பாதுகாப்பு மிகவும் குறைவாகவே உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்புலிகளின் 4 படகுகள் கதிரமலைப் பகுதிக்குச் சென்றதை அவதானித்த பொலிஸார் - அதுகுறித்து கடற்படைக்கு அறிவித்ததாகவும் குறிப்பிட்ட பகுதிக்கு கடற்படையினர் வந்தபோது புலிகளின் படகுகள் சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதையடுத்து கற்பிட்டிக்குத் திரும்பிய பொலிஸார் கடற்படையினரின் படகுகளில் மீண்டும் பள்ளியவத்தைக்குச் சென்றதாகத் தெரியவருகிறது. (தே)

## சப்பாத்தின் கீழ் பொருத்தப்பட்ட வெடிபொருட்கள் கண்டுபிடிப்பு!

### பொலனறுவ பகுதியில் சம்பவம்

கொழும்பு —

அடிப்பகுதியில் மிகவும் சக்தி வாய்ந்த வெடிமருந்து நிரப்பப்பட்ட சப்பாத்தொன்று பொலநறுவ - பாதுவ பிரதேச வயல் பகுதியிலிருந்து மொனராகலை பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டது.

மொனராகலை பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து இந்தக் குண்டு கண்டுபிடிக்கப்பட்டதுடன், அது மேலதிக பரிசோதனைக்காக லம்புக்வெல பொலிஸ் விசேட அதிரடிப் படை முகாமுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரால் இது சோதனைக் குட்படுத்தப்பட்டபோது -

சப்பாத்தின் அடியில் 'சி 4' ரக அதிசக்தி வாய்ந்த வெடிபொருள் நிரப்பப்பட்டது உறுதி செய்யப்பட்டது. இது தொடர்பான விசாரணை அறிக்கை விசேட அதிரடிப்படையினரால் மொனராகலை பொலிஸாரிடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டது.

இந்தச் சப்பாத்தின் அடியில் 'சி 4' ரக அதிசக்தி வாய்ந்த வெடிமருந்து 100 கிராம் அளவில் இருந்ததாகவும், தற்கொலை குண்டுதாரி பயன்படுத்தும் ஆடைத்தொகுதிக்கும் இந்த வெடிமருந்தே பயன்படுத்தப்படுவதாகவும் மொனராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

6 வயதுப் பிள்ளை ஒன்றின் சப்பாத்தின் அடியில் இந்த வெடிமருந்து நிரப்பப்பட்டதாகவும், சோதனைகளின் போது சிறுவர்கள் குறித்து அதிக கவனம் எடுக்காததால் இது பொருத்தப்பட்டிருக்கலாமெனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (தே)

## மின்சாரசபை மறுசீரமைப்பை எதிர்த்துப் போராட முடிவு

கொழும்பு —

மின்சார சபை மறுசீரமைப்புச் சட்டமூலத்தை அரசாங்கம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ள நிலையில் - சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்ட மறுநிமிடமே தாம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்கப்போவதாக மின்சார சபை தொழிற்சங்கத்தின் செயலாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்தார்.

சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் நேரமானது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கான வேளையாகவே அமையும் என்றும் அவர் தெரிவித்தார்.

# லக்மல் சம்பத் கொலை 25 பேரிடம் விசாரணை

கொழும்பு—

சிங்கள ஊடகவியலாளரான லக்மல் சம்பத் கொலை தொடர்பாக 25 பேரிடம் விசாரணை நடத்தப் பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித் தனர்.

லக்மல் சம்பத் கொலைக்கு 3.8 பிஸ்டல் பயன்படுத்தப்பட்டிருக்கக் கூடும் என்றும், அவருக்கு இதற்கு முன்னர் எந்தவித அச்சுறுத்தலும் இருந்தது இல்லை என்றும் பொலி ஸார் கூறியுள்ளனர்.

சத்தின நாளேட்டில் பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பாக கட்டுரை களை அவர் எழுதி வந்தார். கடந்த சனிக்கிழமை இரவு அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

லக்மல் சம்பத் கொலைக்கு சுதந் திர ஊடக இயக்கம் கண்டனம் தெரி வித்துள்ளது.

கடந்த 16 மாதங்களில் 4 ஊடக வியலாளர்களை உள்ளடக்கிய 6 ஊடகப் பணியாளர்கள் கொல்லப்பட் டுள்ளனர். கடந்த 20 ஆண்டுகளாக கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் கொலை வழக்கில் எந்தவித விசா ரணையும் மேற்கொள்ளப்படவில்லை என்று கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை முஸ்லிம் ஊடகப் பேர வையும் சம்பத் கொலைக்கு கண் டனம் தெரிவித்துள்ளது.

# கிரனேட் வீச்சு !

திருகோணமலை—

திருகோணமலை-மகாமாய புர வில் ஊர்காவற்படை காவலரண் மீது நேற்று முன்தினம் இரவு கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டதாக விசேட ஊடகத்தகவல் மையம் தெரிவித்தது.

நேற்று முன்தினம் இரவு 8.15 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலின் போது எந்தவித சேத மும் ஏற்படவில்லை எனக்கூறப்பட் டுள்ளது.

# அகதிகளின் வருகை அதிகரிப்பு

# புதிய முகாம்கள் அமைக்க முடிவு

விருதுநகர்—

இலங்கையிலிருந்து தமிழகத்து க்கு வரும் அகதிகளின் எண்ணி க்கை அதிகரித்து வருகிறது. அவர்க ளுக்காகப் புதிய முகாம்கள் அமைக்க மேலதிக நிலங்களின் விபரங்களைச் சேகரிக்கத் தமிழக அரசு உத்தர விட்டுள்ளது.

தமிழகத்தில் 22 மாவட்டங்களில் இலங்கை அகதிகள் முகாம்கள் உள் ளன. தற்போது இலங்கையில் நில வும் பதற்றத்தால் தமிழகத்துக்கு அகதிகள் வருகை அதிகரித்து வரு கிறது. இவர்களை 22 மாவட்டங் களில் உள்ள அகதிகள் முகாம்களில் தங்கவைக்க குடியிருப்புகள் வெறு மையாக உள்ளதா எனக் கணக் கெடுக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

போதிய வீடுகள் இல்லாத பட்சத் தில் மாவட்டங்களில் உள்ள அரச புறம்போக்கு நிலம் எத்தனை ஏக்கர் உள்ளது என்ற விபரத்தையும் தமி ழக அரசு கேட்டுள்ளது.

அவ்வாறு நிலமிருந்தால் அவற் றில் இலங்கை அகதிகளுக்குப் புதிய முகாம்கள் அமைக்கவும் முடிவெடுத் துள்ளதாக அதிகாரிகள் தெரிவித் தனர்.

ஒவ்வொரு 15 நாட்களுக்கு ஒரு முறை முகாம்களில் வசிப்போரின் குடும்பத் தலைவருக்கு 100 ரூபா, 12 முதல் 17 வயது வரையுள்ள குடு ம்ப உறுப்பினருக்கு 72 ரூபா, 9 முதல் 11 வயது வரையுள்ள உறுப் பினருக்கு 45 ரூபா, 8 வயது வரை யுள்ள குழந்தைக்கு 22.50 சதம் என நிவாரண நிதி வழங்கப்படுகிறது. இந்தத் தொகை குடும்பம் நடத் தப் போதாது என்பதால் அகதிகளில் பலர் கூலி வேலைக்குச் செல்கின்ற னர்.

இவர்களுக்கென அமைத்துத் தரப் பட்ட வீடுகளில் மாதம் 15 அலகுகள் மின்சாரம் மட்டுமே பயன்படுத்த வேண்டும். அதற்கு மேல் பயன்படுத் தினால் அந்தத் தொகையை அகதிகள் தான் கட்ட வேண்டும் என்ற கட்டுப் பாடும் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சமத்துவபுரத் தினருக்கு வழங்கப்படவுள்ளது போல இலங்கை அகதிகளுக்கும், இலவசக் கலர் தொலைக்காட்சி வழங்கப்பட உள்ளதாக அகதிகளிடையே தகவல் பரவியுள்ளது.

தொலைக்காட்சி வழங்கப்பட்டால் 15 அலகுகள் மின்சாரத்தை மட்டுமே உபயோகிக்க வேண்டும் என்ற விதி முறையைத் தளர்த்த வேண்டியிருக் கும். இதனால், அகதிகளுக்குக் கலர் தொலைக்காட்சி வழங்கப்படுவது சந்தேகமே என வருவாய்த் துறை யினர் தெரிவித்தனர்.




# பிரதேச செயலகத்தை இடம் மாற்ற கோரிக்கை

ஆழியவளை—

மருதங்கேணி பிரதேச செயலகத்தை குடத்தனைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்குமாறு அந்தப் பகுதி மக்கள் அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகம் மருதங்கேணியிலும், அதன் உப அலுவலகம் குடத்தனையிலும் இயங்கிவருகிறது. தற்போதைய அசாதாரண சூழல் காரணமாக மணற்காடு, குடத்தனை, அம்பன், பிரதேச மக்கள் மரு தங் கேணி செல்வதில் சிரமங்களை எதிர்கொள்வதாகவும், இதனால் தமது தேவை களை உடனடியாகப் பூர்த்தி செய்ய முடியாதிருப்பதாகவும் தெரிவித்தனர்.

எனவே மருதங்கேணி பிரதேச செயலகத்தை குடத்தனை உப அலுவல கத்தில் இயங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளனர்.

IIS COMPUTER COURSES

IIS IIS IIS IIS IIS

A/L 2006 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே !

உங்கள் பரீட்சை முடிவுகள் வெளியாகும் வரையுள்ள பொன்னான காலத்தை IIS இல் இணைந்து பயனுள்ளதாக்குங்கள்

சர்வதேச அங்கீகாரம் பெற்ற கணனிநிறுவனம் ஒன்றின் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஓர் அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்

New Batches Start on :

Batch 1 [ Weekday ] : 23.06.2006
Batch 2 [ Weekend ] : 01.07.2006
Batch 3 [ Weekday ] : 10.07.2006
Batch 4 [ Weekend ] : 23.07.2006
at 09.30 A.M.

Diploma Courses

- Diploma in MS Office
- Diploma in Desk Top Publishing
- Diploma in Internet Technology
- Diploma in Hardware Technology
- Diploma in Computer Programming
- Diploma in Eng. Drawing & AutoCAD

சிறப்புக் கட்டணச் சலுகையில் கணனிக் கற்கைநெறிகள் சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள் !!

கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்

INSTITUTE OF INFORMATICS STUDIES (IIS)
# 100, Clock Tower Road, Jaffna
Tel : 021 222 2831 Fax : 021 222 6933 Email : iiscc@sltnet.lk

# கல்வி மேம்பாட்டுக்கு வழங்கப்பட்ட நிதி உரிய முறையில் பயன்படுத்தப்படவில்லை

யாழ்ப்பாணம் —

வட-கிழக்கு மாகாண பாடசாலைகளின் கல்வி சார் நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக உலக வங்கி வழ்ங்கிய நிதி மத்திய கல்வி அமைச்சால் வழங்கப்பட்ட போதிலும் - வலயக் கல்வி அலுவலகங்களால் உரிய முறையில் பயன்படுத்தப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

வட-கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளின் கல்விசார் நடவடிக்கைகளை மேம்படுத்த 103 மில்லியன் ரூபா வட-கிழக்கிலுள்ள 24 வலயக் கல்வி அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்டது.

உலக வங்கியின் நிதியுதவி மூலம் மத்திய கல்வி அமைச்சால் மாகாணக் கல்வி அமைச்சின் ஊடாக வழங்கப்பட்ட இந்த நிதியைப் பயன்படுத்தி, இந்த வருடம் முடிவதற்குள் கல்வி வலய மட்டத்தில் கல்விசார் செயற்பாடுகளை முக்கியமான ஆறு விடயத் தலைப்புகளின் கீழ் நிறைவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டது.

இந்த வகையில் வலயக் கல்வி அலுவலகங்களின் பொது நிர்வாகம், ஆசிரியர் சேவைக் காப்பு பயிற்சி, மாணவர் மையச் செயற்பாடு, விசேட கல்வி, முறைசாராக் கல்வி, இயலுமை விருத்திச் செயற்பாடு என ஆறு பிரதான விடயத் தலைப்புகளின் கீழ் திட்டமிட்டு இந்த வருடம் முடிவதற்கு முன்னர் இந்த நிதி பயன்படுத்தப்படவேண்டுமென அறிவுறுத்தப்பட்டிருந்தது.

எனினும் குறிப்பிட்ட நிதி உரிய முறையில் வலயக் கல்வி அலுவலகங்களால் பயன்படுத்தப்படாமல் இருப்பது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## கண்ணிவெடி அகற்றும் தூசியால் ஆறுகால்மடம் மக்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம் —

ஓட்டுமடம் - காக்கைதீவுக்குட்பட்ட பொம்மை வெளிப் பகுதியில் கண்ணிவெடி அகற்றல் செயற்பாடு மேற்கொள்ளப்படும்போது பெருமளவு மண் தூசிகள் மேலேழுந்து ஆறுகால்மடம் பழைய வீதிப் பகுதியிலுள்ள குடிமனைகளை நோக்கிப் பரவுவதால் அந்தப் பகுதி வீடுகளுக்குள்ளும் வெளியேயும் தூசி படிந்து சூழலை மாசுபடுத்தி வருவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்தத் தூசி பரவி வருவதால் உடைகளை உலரவிடுதல், உணவு தயாரித்தல் மற்றும் சுவாசித்தல் செயற்பாடுகளுக்கு மிகுந்த சிரமத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

அத்துடன் சிறுவர் முதல் பெரியோர் வரை உடலில் தூசி படிவதால் உடலில் கடி, தடிமன், இருமல், தும்மல் போன்ற நோய்களும் ஏற்படக் காரணமாகவுள்ளது.

அத்துடன் வீடுகளுக்குள்ளேயும், வெளியேயும் இந்தத்தூசி படிவதால் பொருட்கள், உணவுப்பண்டங்களைப் பாதுகாக்க முடியாதுள்ளது. எனவே இதனைக் கருத்திற் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் செயற்பட வேண்டுமென அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## விஞ்ஞான மேம்பாட்டு மதிப்பீட்டு பரீட்சை

சாவகச்சேரி —

சாவகச்சேரி கல்வி வலயத்தில் விஞ்ஞான கல்வி மேம்பாட்டுக்கான செயற்கைத் மதிப்பீட்டுப் பரீட்சை நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

விஞ்ஞானபாடஆசிரியர்கள் அனைவரும் நாளை மறுதினம் வலயங்களுக்கு வருகைதந்து வினாத்தாள்களைப் பெற்றுக்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் எ.வேதநாயகம் கேட்டுள்ளார்.

இந்தப் பரீட்சை கடந்த 30 ஆம் திகதி இடம்பெறவிருந்ததாகவும் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட வேண்டி ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

## வடமராட்சிப் பகுதியில் சர்வமதக்குழு அமைப்பு

வடமராட்சி —

மதங்களிடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்த மனித உரிமைகளுக்கான சர்வமதக் குழு வடமராட்சியில் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

சர்வமதக்குழு அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் இடம்பெற்றது.

சர்வமதங்களிடையே இணக்கப்பாட்டையும் மனித உரிமைகளை பேணும் வகையிலுமே இந்த சர்வ மதக்குழு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது என பங்குத்தந்தை ஆனந்தகுமார் தெரிவித்தார்.

மக்களை அழிவுப் பாதையிலிருந்து நல்வழிப்படுத்தி, தூயநெறியில் செல்ல இந்த அமைப்பு உறுதுணையாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

கிறிஸ்தவ மத குருமார்கள், இந்து மத குருமார்கள், முஸ்லிம் மௌலவிகள் ஆகியோர் இந்த சர்வமதக்குழுவில் அங்கம் வகித்துள்ளனர் எனவும், இவர்களை ஒன்றிணைத்து மக்களுக்கான பணிகள் முன்னெடுக்கப்படுமெனவும் பங்குத் தந்தை மேலும் தெரிவித்தார்.

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம் —

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தில் தொழிற்துறைத் திணைக்களத்தால் ஆரம்பிக்கப்படவுள்ள அலுமினியப் பொருத்துகை பயிற்சிநெறி பயிற்றுவிப்பாளருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகுதியுடைய விண்ணப்பதாரிகள் - தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக சுயமாகத் தயாரித்து, பிரதேச செயலர், பிரதேச செயலகம், கோப்பாய் என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. முன்னனுபவம் விரும்பத்தக்கது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விண்ணப்ப திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம் —

சைவ பரிபாலனசபை நடத்தவுள்ள இந்த வருட சைவநெறித் தேர்வுக்கான விண்ணப்ப திகதி நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழல் காரணமாக எதிர்வரும் 17 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

எனவே, விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விண்ணப்பங்களை அனுப்பலாமென பதில் தேர்வுச் செயலாளர் சு.செல்லத்துரை அறிவித்துள்ளார்.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : ச.சஞ்சீவ்
முகவரி : நல்லூர்.

அகவை ஐந்து



பெயர் : கி.தனபைரவி
முகவரி : தொண்டமானாறு.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் ..........
முகவரி ..........
பிறந்த ஆண்டு ..........
கூப்பன்களுடன் புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
..........
பெற்றோர் ஒப்பம்



## மோட்டார் சைக்கிளிலிருந்து தவறி வீழ்ந்த பெண் மரணம்

வடமராட்சி —

வடமராட்சிப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் இருந்து தவறி வீழ்ந்த வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் வடமராட்சி மந்திகையைச் சேர்ந்த வியாபாரியான பூமணி (வயது -60) என்பவரே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

வடமராட்சி கிழக்கு அம்பன் பாடசாலைக்கு அருகில் சிறு வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் இந்த வயோதிபப் பெண் - கடந்த ஞாயிற்றுக்கிழமை போக்குவரத்துச் சபை பஸ்கள் சேவை யில் ஈடுபடாததால் வீதியால் வந்த ஒருவரின் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருக்கையில் தவறி வீழ்ந்து உயிரிழந்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 1.30 மணியளவில் குடத்தனைப் பகுதியில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த வயோதிபப் பெண்ணின் சடலம் மேலதிக விசாரணைகளுக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டு பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது

## 25 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் —

வரலாற்று சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் கடந்த 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இந்த மஹோற்சவ நிகழ்வுகளின் போது அன்னதானப் பணி மேற்கொள்ளும் காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையின் அன்னதான சபையின் 25 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை சபைத் தலைவர் பொ.சற்குணநாதன் தலைமையில் உரும்பிராய் சந்தரோதய வித்தியாசாலை மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் சகல அங்கத்தவர்களையும் நலன் விரும்பிகளையும் கலந்து கொள்ளுமாறு செயலாளர் க.நாகராசா கேட்டுள்ளார். (43)

## தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் விண்ணப்ப முடிவுத் திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம் —

2007 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு முதல் தடவையாக வெளிவாரியாக தோற்றவுள்ளவர்களுக்கான பதிவுத் திகதி எதிர்வரும் 21 ஆம் திகதி வரை கல்வியமைச்சால் நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கான பதிவு கடந்த 10 ஆம் திகதியுடன் முடிவடைவதாக இருந்ததாகவும், கணிசமானோர் பதிவுகளை மேற்கொள்ளாத காரணத்தால் பதிவுத் திகதி நீடிக்கப்பட்டிருப்பதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் பிரகாரம் 2007 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்கு முதல் தடவையாக வெளிவாரியாக தோற்றவுள்ளவர்களுக்கான பதிவுத் திகதி எதிர்வரும் 21 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் எந்தக் காரணம் கொண்டும் பதிவுத் திகதி நீடிக்கப்படமாட்டாது எனவும், இதுவே இறுதிச் சந்தர்ப்பம் எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

மேலதிக விபரங்களை மாகாண கல்வி அமைச்சு அல்லது வலயக் கல்வி அலுவலகத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கணினிப் பயிற்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம் —

யாழ். பிராந்திய ஆணையாளர் அலுவலகம் ஊடாக அரச அலுவல்களுக்கான கணினிப் பயிற்சி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இடம்பெற்றுவந்த இந்தப் பயிற்சிநெறி அண்மையில் இடம்பெற்ற பணிப்புறக்கணிப்பு காரணமாக இடை நிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சாரதி அனுமதி பத்திரத்துக்கான செய்முறைப் பரீட்சைத் திகதிகள்

யாழ்ப்பாணம் —

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தால் செய்முறைப் பரீட்சைக்கான திகதி வழங்கப்பட்டு நடத்தப்படாத செய்முறைப் பரீட்சைகள் பின்வரும் புதிய திகதிகளில் நடைபெறும் என மோட்டார் போக்குவரத்து திணைக்கள யாழ்.மாவட்ட உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் தெரிவித்தார்.

| செய்முறைப் பரீட்சை நடைபெற இருந்த திகதி | செய்முறைப் பரீட்சை நடைபெறவுள்ள புதிய திகதி | நேரம் |
|---|---|---|
| 2006.06.24 | 2006.07.06 | பி.ப 2.00 மணி |
| 2006.06.26 | 2006.07.07 | பி.ப 2.00 மணி |
| 2006.06.27 | 2006.07.10 | மு.ப.9.00 மணி |
| 2006.06.28 | 2006.07.12 | பி.ப 2.00 மணி |
| 2006.06.29 | 2006.07.13 | பி.ப 2.00 மணி |
| 2006.06.30 | 2006.07.14 | மு.ப 2.00 மணி |





அண்மையில் சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கியில் இந்த ஆண்டுக்கான பத்தும் விமன -2006 கிளைமட்ட சீட்டிழுப்பு நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலி. தெற்கு பிரதேச செயலர் திருவாகரன் முதலாவது வெற்றியாளரைத் தெரிவு செய்வதையும், வங்கி அலுவலர் நீல் நிஷாந்தன் கருணைராஜ் நிகழ்வை தலைமையேற்று நடத்துவதையும், வங்கி முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரன் உரையாற்றுவதையும், பிரதம விருந்தினர் மற்றும் வங்கி அலுவலர்கள் அமர்ந்திருப்பதையும் காணலாம். (68)

# மன்னார் சேதங்களைப் பார்வையிட ஆயர் மன்றக் குழுவினர் வருகை

மன்னார் —

மன்னார் பகுதியில் அண்மைக் காலமாக நடைபெற்று வரும் அசம்பாவிதங்களினால் ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிட்டு பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்திக்க கத்தோலிக்க ஆயர் மன்றக் குழுவினர் நேற்று முன்தினம் காலை மன்னார் வந்தடைந்தனர்.

படையினரின் தாக்குதலுக்குள்ளான பேசாலை - புனித வெற்றி நாயகி ஆலயம் உட்பட மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட ஏனைய பகுதிகளுக்கும் ஆயர்குழு சென்றது. இதே நேரம் பேசாலை அனர்த்தங்களை ஆராய ஜனாதிபதியின் விஷேட ஆணைக்குழு கடந்த மூன்று தினங்களுக்கு மேலாக மன்னாரில் தங்கி விசாரணைகளை நடத்தி வருகின்றனர். இந்த ஆணைக்குழுவினரையும் ஆயர் மன்றக் குழுவினர் நேற்று முன்தினம் பேசாலையில் சந்தித்தனர்.

இலங்கை ஆயர் மன்றத் தலைவரும், கண்டி மறை மாவட்ட ஆயருமான அதி வணக்கத்துக்குரிய விவியன் பெனாண்டோ, காலி மாவட்ட ஆயர் ஹெரல் அந்தோனி, அநுராதபுரம் ஆயர் றோபட் அந்திராடி, மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசேப்பு ஆகியோர் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இதேநேரம் நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் மன்னார் புனித செபஸ்ரியார் பேராலய மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மன்னார் அரச அதிபர், பிரதேச செயலாளர்கள் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர் அடைக்கலநாதனின் செயலாளர் அரச, அரச சார்பற்ற திணைக்கள தலைவர்கள், மீனவர் சமூகம், குருக்கள், கன்னியாஸ்திரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆயர் குழுவினரிடம் அனைவரும் மன்னாரில் மக்களுக்கு உள்ள பிரச்சினை தொடர்பாக மிகத் தெளிவாக எடுத்துரைத்தனர். (மோ)

# மன்னாரில் இளைஞனின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது

மன்னார் —

மன்னார் பஸார் வீதியில் கடந்த 30 ஆம் திகதி காலை 10 மணியளவில் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட இளைஞரின் சடலம் அவரது தாயாரால் அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த இளைஞர் முல்லைத்தீவைச் சேர்ந்தவராவார்.

மன்னார் வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டிருந்த இளைஞரின் சடலம் அருளப்பு ராஜீவ்குமார் (வயது 24) எனும் தனது மகனுடையது என இறந்த இளைஞரின் தாயார் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் காலை முல்லைத்தீவிலிருந்து - மன்னாருக்கு வந்த அருளப்பு ஆரோக்கியம் மன்னார் வைத்தியசாலை அதிகாரிகளைச் சந்தித்து பொலிஸார் முன்னிலையில் சடலத்தைச் சவச்சாலையில் அடையாளம் காட்டினார்.

நேற்று முன்தினம் மாலை 3.30 மணியளவில் பொலிஸாரின் அனுமதியுடன் தனது மகனின் சடலத்தை அருளப்பு ஆரோக்கியம் முல்லைத்தீவு புதுக்குடியிருப்புக்கு எடுத்துச் சென்றார். (மோ)

# மடுமாதா ஆடி மாத உற்சவத்தில் 5000 இற்கும் குறைவான பக்தர்கள்

மன்னார் —

மன்னார் மடு அன்னையின் ஆடி மாத உற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அன்னையின் அருளையும் ஆசியையும் பெறுவதற்காக இன மத வேறுபாடின்றி கடந்த காலங்களில் லட்சக்கணக்கான பக்தர்கள் மடுத் திருத்தலத்தில் கூடி விழா எடுப்பது வழமை. இருந்தபோதும் இந்தமுறை அது மிக மோசமாகக் குறைந்து சுமார் ஐந்தாயிரத்துக்கும் குறைவான பக்தர்களே வருகை தந்துள்ளனர்.

அண்மைக்காலமாக மடுத் திருத்தலத்தை அண்டிய பகுதிகளில் ஆழ ஊடுருவித்தாக்கும் படையணியினரால் மேற்கொள்ளப்பட்டு வந்த கிளைமோர் தாக்குதல் மற்றும் மடு சோதனைச் சாவடியில் படையினரின் கெடுபிடிகள், நாட்டில் ஏற்பட்டுள்ள யுத்த சூழல்களே பக்தர்களின் வருகையைக் குறைத்துள்ளது.

அன்னையின் திருவிழாக் கூட்டுத் திருப்பலி மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப்பு, அநுராதபுரம் ஆயர் றொபட் அந்திராடி ஆகியோரால் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

மன்னார் ஆயர் மறையுரை நிகழ்த்துகையில் - இனிவரும் நாட்கள் எமது நாட்டில் அமைதியும், சமாதானமும் நிறைந்த நாட்களாக இருக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளும் - அரசாங்கமும் போர் நிறுத்த உடன்படிக்கையிலுள்ள அனைத்து சரத்துக்களையும் ஏற்று நடக்கவேண்டும்.

மனித உயிர்கள் அழிக்கப்படுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும். தொடர்ந்து மனித இரத்தம் சிந்தப்படுவதை கத்தோலிக்க சமூகம் ஏற்றுக்கொள்ளாது. தற்போதுள்ள யுத்த பீதி காரணமாகவும், அச்சம் காரணமாகவும் மடு அன்னையை தரிசிப்பதற்கு காத்திருந்த பெருமளவு மக்கள் தமது பயணத்தை மேற்கொள்ளவில்லை. இதையிட்டு தான் கவலையடைவதாகவும் ஆயர் தெரிவித்தார்.

அன்னையின் விழாவில் - வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம், அரசாங்க அதிபர் வி.விஸ்வலிங்கம், மேலதிக அரச அதிபர் நீக்கிலாப்பிள்ளை, மடு உதவி அரச அதிபர், மன்னார் குருக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (மோ)

# கரும்புலிகள் நாளை முன்னிட்டு கிளிநொச்சியில் சிரமதானப் பணி

கிளிநொச்சி —

கரும்புலிகள் நாளை முன்னிட்டு கிளிநொச்சிப் பிரதேசம் எங்கும் பெருமெடுப்பிலான சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரச, அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களின் அலுவலர்கள் ஒன்றிணைந்து இந்தச் சிரமதானப் பணிகளை மேற்கொள்கின்றன.

பிரதான வீதி, அதனை அண்மித்த சிறுவீதிகள், கிளிநொச்சி வைத்தியசாலை, அதனை அண்மித்த பகுதிகள், நிறுவனங்கள், பணிமனைகளின் வளாகங்கள் எனப் பாரியளவில் நகரை தூய்மையாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி நகர், அதனை அண்மித்த பிரதான வீதியில் இருமருங்கும் பற்றைகள் வெட்டப்பட்டு, கரும்புலிகள் நாளை நினைவு கூரும் பதாதைகள் கட்டப்பட்டதுடன், கிளிநொச்சி நகர் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்டப் பணியாளர்கள் ஒன்றிணைந்து அலுவலகத்தையும், அதனைச் சூழவுள்ள பகுதிகளையும் சிரமதானப் பணிகள் மூலமாகத் தூய்மையாக்கியுள்ளனர். (91)

# சுதேச மருத்துவர்களின் நடைமுறைகள் அறிவிப்பு

கிளிநொச்சி —

சுதேச மருத்துவர்களாக பணியாற்றுவோர் பின்வரும் நடைமுறைகளின் படியே பணியாற்ற அனுமதிக்கப்படுவரென தமிழீழ சுகாதார சேவைகளின் சுதேச மருத்துவப் பிரிவு அறிவித்துள்ளது.

இதன்படி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், சுதேச மருத்துவ கல்லூரி ஆகிய நிலையங்களில் பட்டம் பெற்று சான்றிதழ்கள் உள்ளவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட ஆங்கில மருந்துகள் பாவிக்க அனுமதிக்கப்படுவர்.

ஹோமியோபதி வைத்தியர்கள் ஹோமியோபதி மருந்துகள் மட்டுமே பாவிக்க வேண்டும். ஏனைய சுதேச வைத்தியத்தின் பரம்பரை வைத்தியர்கள் - பதிவு செய்யப்பட்டவர்கள், பதிவு செய்யப்படாதவர்கள் சுதேச மருந்துகளை மட்டுமே பாவனையில் செயற்படுத்திக் கொண்டிருத்தல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# கடற்படையினரின்தடையால் மீனவக் குடும்பங்கள் பாதிப்பு

மன்னார் —

பேசாலை கடற்பரப்பில் கடந்த 17 ஆம் திகதி இடம்பெற்ற கடற்சமரை அடுத்து மன்னார் மீனவர்களுக்கு கடலில் மீன்பிடிக்கச் செல்ல கடற்படையினர் அனுமதி மறுத்திருந்தனர்.


இந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் மன்னார் மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் கடற்றொழிலுக்குக் கடற்படையினர் அனுமதித்திருந்தனர்.


எனினும் பள்ளிமுனை, பேசாலை மீனவர்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை.

இதனால் பள்ளிமுனையில் 578 குடும்பங்களைச் சேர்ந்த 2ஆயிரத்து 718 பேரும், பேசாலையில் ஆயிரத்து 168 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 430 பேரும் தொழிலின்மை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை இவ்விரண்டு கிராமங்களுக்கும் உலர் உணவு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மன்னார் அரச அதிபர் மற்றும் மன்னார் பிரதேச செயலாளரால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இந்த நிவாரணப் பொருட்கள் யாவும் அந்தந்தப் பகுதி பல நோக்கு கூட்டுறவுச்சங்கங்களின் ஊடாக வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மன்னார் பனங்கட்டிக்கொட்டு மீனவர்களும்பள்ளிமுனை கடற்பரப்பிலேயே தொழில் புரிகின்றனர். பள்ளிமுனை மீனவர்களின் தடை காரணமாக அந்தப் பகுதியில் பனங்கட்டிக் கொட்டு மீனவர்கள் தொழில் புரிய முடியாத நிலையால் இந்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் இவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லையென இவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இதனால் குறித்த இந்த மூன்று கிராமத்தவர்களும் பொருளாதார ரீதியாக மிகவும் பாதிப்படைந்துள்ளனர். (மோ)





கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு - கிளிநொச்சி நகர்ப்பகுதியில் கரும்புலிகளின் திருவுருவப் படங்கள் தாங்கிய ஊர்திப் பவனி இடம்பெற்று வருவதைப் படங்களில் காணலாம்.

# கட்டாக்காலி நாய்களை ஒழிப்பதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

## தமிழீழ சுகாதார சேவைகள் தெரிவிப்பு

கிளிநொச்சி —

கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுக்கு அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென தமிழீழ சுகாதார சேவைகள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

வைத்தியசாலையில் நாய்க் கடியால் பாதிப்புற்று சிகிச்சைக்கு வருவோரின் தொகை அதிகரித்துச் செல்வதைக் கருத்தில் கொண்டு அதைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் தமிழீழ சுகாதார சேவைகளால் ஜூன் மாதம் நீர் வெறுப்பு நோய் விழிப்புணர்வு மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. பல பிரதேசங்களில் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டதுடன் பாடசாலைகளில் விழிப்புணர்வுக் கண்காட்சி, படக்காட்சி, விழிப்புணர்வு கருத்துக்கள் என்பன வழங்கப்பட்டு வந்தன.

அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் 10 பாடசாலைகளில் நீர் வெறுப்பு நோய் தொடர்பான கண்காட்சி, படக்காட்சி காண்பிக்கப்பட்டு 10ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன்பெற்றனர். 2 ஆயிரத்து 500இற்கும் மேற்பட்ட கட்டாக்காலி நாய்கள் பிடித்து அழிக்கப்பட்டன. கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி போடப்பட்டது.

எனவே வீட்டில் வளர்ப்பு நாய்களுக்கு அந்தப் பகுதி பொதுச் சுகாதார பரிசோதகர்களுடன் தொடர்பு கொண்டு தடுப்பூசிகள் போட்டு கழுத்தில் பட்டி அணிந்து தகடு போட்டு, பிரதேசசபையில் அனுமதி பெற்று கட்டி வளர்க்குமாறு அனைவரையும் தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுக் கொள்கின்றனர். அத்துடன் கட்டாக்காலியாக திரியும் நாய்கள், தெருவில் திரியும் நாய்கள் பிடித்து அழிக்கப்படும்.

அத்துடன் கட்டப்படாத நாய்களை இனங்கண்டு உரியவர் மீது குற்றப் பணம் அறவிடப் படும். இந்தச் செயற்பாடு தொடர்ந்து நடைபெறும். எனவே இந்தச் செயற்பாட்டுக்கு அனைவரையும் ஒத்துழைத்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!
குடிசெய்வல் என்னும் ஒருவர்க்கு தெய்வம்
மடிதற்று தாம் முந்துறும்
- திருக்குறள்.

## நமது நோக்கு

# தற்கொடை

பலவீனமான எமது இனத்தின்-பலமான ஆயுதமாக விளங்கியவர்கள் கரும்புலிகள் என்ற கூற்று பிரபலமானது.

பலம்தான் இன்று சர்வ உலகையும் ஆட்சி செய்கிறது. ஒரு காலத்தில் ரோம சாம்ராஜ்ஜியம் பலமாக இருந்தது. பின்னர் போர்த்துக்கேயர், டச்சுக்காரர் என்று தொடர்ந்த காலனியாதிக்கம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம்வரை விரிவடைந்தது.

இது போலவே, மேலும் பல நாடுகளும் தமது பலத்தைக் கொண்டே பல நாடுகளை அடிமைப்படுத்தி ஆட்சி செய்தன.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் காலனித்துவ யுகம் கலைந்து போய்விட்டாலும் - இன்றும் கூட தமது பலத்தால் நாடுகளை, மக்களை, இனக்குழுமங்களை அடக்கியாளும் சக்திகள் இருக்கின்றன.

அமெரிக்காவின் ஆயுதபலம்தான் இன்று சட்டாம்பிள்ளைத்தனமாக நடந்துகொள்ளவைத்திருக்கிறது. ஜப்பானின் பொருளாதார பலம்தான் அமெரிக்காவை அஞ்சவைக்கிறது.

எனவே, பலம் என்பதுதான் இன்றைய நவீன உலகில் - நாடுகளின், இனக்குழுமங்களின் பாதுகாப்புக் கவசமாக இருக்கின்றதென்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

1948 இல் சுதந்திரமடைந்த இலங்கைத்தீவில் சிறுபான்மை தமிழ்மக்கள் எந்தப் பலத்துடனும் இருக்காததன் விளைவாகத்தான், அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, நசுக்கப்பட்டு வாழும் நிலை ஏற்பட்டது.

ஆனால், அதே ஈழத்தமிழினம் இன்று தலை நிமிர்ந்து நிற்கிறது என்றால் - அதற்கு இப்போது உருவாகியுள்ள பலம்தான் காரணம்.

தமிழர் தரப்பு ஆயுத பலத்துடன்- மட்டுமின்றி சர்வதேச சமூகத்திடமே நீதியாக நடந்துகொள்ளுங்கள் என்று தட்டிக்கேட்கும் அளவுக்கு அரசியல் பலத்துடன் இருக்கின்றதென்பதை எவரும் மறுக்கமுடியாது.

தமிழினம் பலவீனமாக இருக்கின்றபோது நசுக்கியவர்கள் - ஏறி மிதித்தவர்கள் இன்று நடுநடுங்கிப் போயிருக்கிறார்கள் என்றால் அந்தத் தமிழினத்துக்குப் பலத்தைக் கொடுத்து கவசமாக இருந்த தற்கொடைப் போராளிகள்தான் காரணம்.

தமிழினத்தின் பாதுகாப்புக்காக தமது உயிரைக் கொடுத்து வெடித்துச் சிதறிய இவர்கள் தமக்காக எந்த எதிர்பார்ப்பையும் கொண்டிருந்தவர்கள் அல்ல.

தமிழினத்துக்குக் கௌரவமான வாழ்வும், நீதியான சமாதானமும் நியாயமான உரிமைகளும் கிடைக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பில் தமது உயிர்களைக் கொடுத்தவர்கள் ஏராளம்.

இவர்களின் தியாகத்தால்தான் இன்று சர்வதேசத்தின் கவனிப்புக்குரிய ஒரு இனத்துவக் குழுவாக தமிழினம் மாறியிருக்கிறது. உண்மையைச் சொல்லப்போனால் தமிழகத்தில் 6 கோடி தமிழர்கள் இருப்பினும் அவர்கள் தேடிக்கொடுக்காத முகவரியை சில லட்சம் தமிழர்களைக் கொண்ட ஈழத்தமிழர்கள்தான் ஏற்படுத்திக்கொடுத்தனர்.

அந்த முகவரியை ஏற்படுத்தியவர்களில் கரும்புலிகள் - மிகமிக முக்கியமானவர்கள்- கரும்புலிகள் என்ற ஆயுதமும், அவர்களிடம் உள்ள ஆன்ம பலமும் இருக்கும்வரை ஈழத்தமிழர்களை உலகில் எந்த சக்தியாலும் சீண்டமுடியாது.

இன்று இலங்கை அரசின் படைத்துறையில் தளபதிகள் எல்லோருமே அஞ்சுகின்ற உயிராயுதங்களைத் தமிழினம் கொண்டிருப்பதுதான் இன்றுவரை எவரும் இலகுவில் அசைத்துவிடமுடியாது என்ற பலத்தைக் கொடுத்து நிற்கிறது.

இந்தப் பலத்தினூடாகத் தான் ஈழத்தமிழினம் தலைநிமிர்ந்து வாழவும், உலகின் போக்கில் நடைபோடவும் முடியும்.

பலவீனமான எமது இனத்தின் பலம்மிக்க ஆயுதமான உயிராயுதம்தான் ஈழத்தமிழரின் பாதுகாப்புக் கவசம் என்பதை எவருமே மறுக்கவோ - மறந்து வாழவோ முடியாது என்பதே உண்மை.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்

பேச்சு ஆரம்பமாகும் என்ற எதிர்பார்ப்புடன் அரசாங்கம் இருக்கிறது - ரம்புக்வெல




# அரச வங்கிகளில் பெற்ற கடன்களை மீளப்பெற சிறப்பு நிறுவனம் அமைப்பு

கொழும்பு —

அரச வங்கிகளில் பெறப்பட்ட கடன்களை மீள வசூலிப்பதற்காகச் சிறப்பு நிறுவனம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக நிதியமைச்சின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர தெரிவித்தார்.

இது குறித்து பி.பீ.ஜயசுந்தர தெரிவித்துள்ளதாவது -

வங்களில் பலகோடி ரூபாவைக் கடனாகப் பெற்று அவற்றைத் திருப்பிச் செலுத்தாது இருக்கும் பெரும் வர்த்தகர்களிடமிருந்து அந்தக் கடனை மீண்டும் வசூலிப்பதற்காக முழு அதிகாரம் கொண்ட நிறுவனமாக அந்த அமைப்பு செயற்படும் என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாகச் சிறப்புச் சட்டமூலத்தை அடுத்து சில வாரங்களில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டதும் இதுவரை அரச வங்கிகளிடமிருந்து 2 ஆயிரம் கோடி ரூபாக்கு மேல் பணத்தைக் கடனாகப் பெற்று அவற்றைத் திருப்பிச் செலுத்தாது இருக்கும் பெரும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் எனத் தெரிவித்தார்.

இந்தச் சட்டத்தால் உள்நாட்டு வங்கிகளும், வாடிக்கையாளர்களும் பாதுகாக்கப்படுவர் என்று பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது -

இந்த நடவடிக்கை மூலம் 50 லட்சம் ரூபாவுக்குக் குறைவான பணத்தைப் பெற்றுக் கொண்டு, நியாயமான காரணங்களுக்காக அந்தப் பணத்தை மீண்டும் செலுத்துவதைத் தாமதப்படுத்தும் சிறு மற்றும் மத்தியதர வர்த்தகர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு முடியுமாக இருக்கும்.

புதிய சட்டத்தின் மூலம் மோசடியான முறையில் கடனைத் திருப்பிச் செலுத்தாது இருக்கும் வர்த்தகர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவும் வங்கிகளில் சேமிப்புக் கணக்குகளைத் தொடங்கியிருக்கும் வாடிக்கையாளர்களின் கணக்குகளைப் பாதுகாக்கவும் முடியும் எனத் தெரிவித்தார்.

# இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தேசிய அரசு அமைக்க வேண்டும்

## என்கிறார் உடுவே தம்மாலோக தேரர்

கொழும்பு —

இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமெனில் இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்து தேசிய அரசாங்கமொன்றை அமைக்க வேண்டுமென ஜாதிக ஹெல உறுமயவிலிருந்து பிரிந்து சென்று சுயேட்சையாக இயங்கும் நாடாளுமன்ற உறுப்பினர் உடுவே தம்மாலோக தேரர் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது-

நாட்டில் தற்போது அமைதியற்ற நிலைமை காணப்படுகின்றது. மக்கள் அச்சத்துடன் வாழும் நிலைமை வேதனைக்குரியது. எனவே சமாதான செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பமாக வேண்டுமெனில் இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும். எந்தவொரு விடயத்திலும் இணைந்தே செயற்பட வேண்டும். அதாவது அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டியது கட்டாயமாகும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்கு முயற்சிக்கும் போது பல்வேறு தரப்பினரிடமிருந்தும் எதிர்ப்புக் கள் எழலாம். ஆனால் அவற்றைப் பொருட்படுத்தக் கூடாது. அனைத்து மக்களினதும் உரிமைகள் உறுதிப்படுத்தப்படும் வகையில் பிரச்சினைக்கான தீர்வு அமைய வேண்டும்.

சர்வகட்சி மாநாடு என்பது காலத்தை வீணடிக்கும் செயற்பாடு. இதைவிடுத்து இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்றிணையும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# நிதியுதவி செய்யுமாறு கோரிக்கை

நயினாதீவு —

நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து கலாசார அபிவிருத்தி சபையினர் அடியார்களுக்கு குடிநீர், குளிர் பானங்களை நாளை முதல் வழங்கவுள்ளனர். அத்தோடு தேர்த் திருவிழாவான எதிர்வரும் 9ஆம் திகதி அன்னதானமும் வழங்கப்படவுள்ளது.

எனவே இந்தப் பணிகளை சிறப்பாக செய்து முடிப்பதற்குத் தேவையான நிதியை வர்த்தகர்கள் உட்பட அனைவரையும் வழங்கி உதவுமாறு இந்து கலாசார அபிவிருத்திச் சபையினர் அறிவித்தனர்.

# பிரிட்டன் தீ விபத்தில் 3 ஈழத்தமிழர்கள் பலி!

லண்டன் —

பிரிட்டன் - விம்பிள்டன் பார்க் பகுதியில் மின்சார ஒழுக்கினால் ஏற்பட்ட விபத்தில் மூன்று ஈழத்தமிழர்கள் தீயில் எரிந்து உயிரிழந்தனர்.

விம்பிள்டன் பார்க் பகுதியில் வியாபார நிறுவனம் ஒன்றை நடத்தி வந்த கனகராயன் குளத்தைச் சேர்ந்த ரவி என்று அழைக்கப்படும் ரவீந்திரனின் வியாபார நிறுவனத்திலேயே இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த வியாபார நிறுவனத்துக்கு மேல் பகுதியில் இருந்த தங்குமிடத்தில் தங்கியிருந்த ரவீந்திரனின் 2 வயது மகளும், அவரது மனைவியின் தாய், தந்தையுமாக மூவர் தீயில் கருகிப் பலியாகினர்.

மின்சார ஒழுக்கினால் ஏற்பட்ட தீயானது - வியாபார நிறுவனத்தின் மேலுள்ள தங்குமிடத்தில் ஏற்பட்டதனால் அந்த நேரம் அங்கு தங்கியிருந்த அந்த மூவரையும் காப்பாற்ற முடியாமல் போய்விட்டதாகத் தீ அணைப்பு படையினர் தெரிவித்தனர். ரவீந்திரனும், அவரது மனைவியும் காப்பாற்றப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. அதேநேரம் அவர்களது மூத்த மகள் வெளியில் சென்றிருந்தமையால் பாதிக்கப்படவில்லை எனவும் தெரியவரு கிறது.

இந்த விபத்தில் இறந்த ரவீந்திரனின் மனைவியின் தந்தையார் முன்னாள் கொழும்பு றோயல் கல்லூரி ஆசிரியரும், முன்னாள் வவுனியா மகாவித்தியாலய அதிபருமாகிய நெலுக்குளத்தைச் சேர்ந்த சிவஞானம் எனவும் தெரியவருகிறது.

# சிங்கள அரசுகளின் நோக்கம் தமிழரை அழித்தொழிப்பதுதான்

'இனக்கலவரம்' என்ற பெயரால் அன்றைய சிங்கள அரசால் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட மிகப்பாரிய தமிழின அழிப்பு - நடத்தப்பட்டு இந்த 2006 ஆம் ஆண்டு ஜூலை மாதத்துடன் இருபத்தி மூன்று ஆண்டுகள் ஆகின்றன. சிங்கள பௌத்தப் பேரினவாத அரசு அன்று தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்ட அந்த அரச பயங்கரவாதச் செயல்கள் தமிழினத்தின் நெஞ்சில் ஒரு நீங்காத, மறையாத வடுவை நிரந்தரமாகவே ஏற்படுத்திவிட்டன. உலக நாடுகளையும் உலுக்கி விட்ட இந்தக் கொடூரமான கோரச் செயல்கள் நடைபெற்று இருபத்தி மூன்று ஆண்டுகள் ஆகின்ற இந்த வேளையில் சில முக்கியமான விடயங்களை நினைவுக்குக் கொண்டு வந்து, சில கருத்துகளைத் தர்க்கிக்க விழைகின்றோம்.

இலங்கையின் சிங்கள பௌத்த பேரினவாத அரசுகள் ஈழத் தமிழினத்தைப் பூண்டோடு அழித்தொழிப்பதற்காகக் கடைப்பிடித்து வருகின்ற பல செயற்பாடுகளின் ஒரு முகம் தான் இந்த இனக்கலவரம் என்ற இனப் படுகொலைகளாகும். இந்த ஒரு முகத்துக்குக் கூட பல பிறவிகள் உண்டு. இலங்கை சுதந்திரம் பெற்றுப் பத்து ஆண்டுகள் ஆகின்ற காலத்திலேயே ஆரம்பித்த இந்த இனக் கலவரச் செயற்பாடுகள் 1983 இல் ஒரு புதிய உச்சத்தைத் தொட்டன. இவை மட்டுமல்லாது, இலங்கை அரசுகள் தமிழினத்தின் மீது மேற்கொண்ட யுத்தங்கள், அடக்குமுறைகள், உணவு, மருந்து - பொருளாதாரத் தடைகள் போன்றவையும் தமிழின அழிப்பு நடவடிக்கைகளின் வெவ்வேறு முகங்களே!

அன்றைய ஜூலை - கறுப்பு ஜூலை 83 - தமிழின அழிப்பு, சில அடிப்படையான விடயங்களைக் காரணத்தில் கொண்டு இலங்கை அரசால் நடத்தப்பட்டதாகும். அதில் ஓர் முக்கிய காரணம் - தமிழ் மக்களின் பொருளாதாரத் தளத்தைச் சீர்குலைப்பதாகும். அன்றைய தினங்களில் - அதாவது 1983ஆம் ஆண்டு ஜூலை மாதக் கடைசி வாரத்தில் சிங்கள அரசால் அழிக்கப்பட்ட தமிழ் மக்களின் சொத்துக்களின் மதிப்புகள் சுமார் 300 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்று மதிப்பீடு செய்யப்பட்டாலும், உண்மையான இழப்பு இன்னும் பல மடங்காகும் என்றே கருதப்படுகிறது. ஒரு தர்க்கத்துக்காக, 300 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்ற கணிப்பீட்டை ஏற்றுக்கொண்டாலும் கூட, இருபத்திமூன்று ஆண்டுகளுக்கு முன்பு அது ஒரு மிகப்பாரிய இழப்பீடு என்பதில் ஐயமில்லை.

அதைத்தவிர இலங்கை - பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்ற தினத்திலிருந்து மிக அண்மைக்காலம் வரை மாறிமாறி வந்த சிங்கள அரசுகள் தமிழினத் தின் மீது மேற்கொண்ட பொருளாதாரத் தாக் குதல்கள் கொஞ்ச நஞ்சமல்ல. இந்தச் சிங்களப் பேரினவாத அரசுகள் தமிழ் மக்கள் மீது தொடர்ந்து மேற்கொண்ட பாரிய இராணுவ நடவடிக்கைகளும், விதித்த பொருளாதாரத் தடைகளும் தமிழ் மக்களின் வாழ்க்கையை ஓர் இன்னல் மிக்க, துயரம் மிக்க வாழ்க்கையாக மாற்றின.

1983 ஆம் ஆண்டு இனக்கலவரங்களுக்குப் பிறகு நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இலங்கைத் தீவில் சுமார் 65 ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டுள்ளதாகவும், சுமார் 8 லட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும், சுமார் 7லட்சம் மக்கள் புலம் பெயர்ந்துள்ளதாகவும் உலக வங்கியின் அறிக்கை ஒன்று தெரிவித்திருந்தது. அதுமட்டுமல்லாது - தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்குவதற்காக, சிங்கள அரசுகள் ஆறு பில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலவழித்துள்ளதாகவும் பொருளாதார நிபுணர்கள் மதிப்பிட்டிருந்தார்கள்.

'இலங்கைக்குச் செய்து வந்த உதவிகள் யாவற்றையும் நிறுத்தி விடுவதற்கு அமெரிக்கா எண்ணியிருந்த வேளையில்தான் ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றார்' என்றும், அதன் காரணமாக இலங்கைக்கு உதவிகளை நிறுத்தும் தன்னுடைய எண்ணத்தை அமெரிக்கா மாற்றிக்கொண்டது' என்றும் அமெரிக்க அரசின் அன்றைய உதவிச் செயலர் றிச்சட் ஆமிரேஜ் தெரிவித்திருந்தார். இதற்குரிய அடிப்படைக் காரணம் அன்றைய இலங்கை அரசு சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கும், யுத்த நிறுத்தத்துக்கும் விருப்பம் தெரிவித்ததேயாகும்.

ஜூலை 83 இனக்கலவரத்தின் மூலம் தமிழ் மக்களின் மனவலிமையை அழித்து அவர்களுக்குக் கடுமையான, கொடுமையான வன்முறை ஊடாக ஒரு பாடத்தைப் புகட்டுகின்ற முயற்சியை அன்றைய இலங்கை அரசு - ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஐக்கிய தேசியக் கட்சி அரசு - மேற்கொண்டது. அதாவது உளவியல் ரீதியாக "தமிழர்கள் தாங்கள் ஒரு நிர்க்கதியான இனம், தங்களைக் காப்பாற்றுவதற்கு எவரும் இல்லை. தாங்கள் எந்த நேரமும் சிங்களவர்களால் தாக்கப்பட்டு அழிக்கப்படலாம். தாங்கள் எப்போதும் சிங்கள - பௌத்த ஆட்சியின் கருணையின் கீழ், தயவின் கீழ் வாழ வேண்டிய இரண்டாம் தரக் குடிமக்கள்" என்ற ஏக்கமான எண்ணத்தை தமிழ் மக்களின் நெஞ்சங்களுக்குள் ஆழமாகப் புதைக்கும் நோக்கோடும், இந்த ஜூலை 83 இனக்கலவரம் நடத்தப்பட்டது.

ஆனால், கடந்த இருபத்திமூன்று ஆண்டு காலத்துக்குள் ஈழத்தமிழினம் தனிப்பெருமையோடு தலைநிமிர்ந்து எழுந்துவிட்டது. வரலாற்று நாயகன் ஒருவன் வழிகாட்டுகின்ற வரலாற்று காலத்திலேயே விடுதலைப் போராட்டத்துக்குப் பங்களித்து பங்குபற்றி ஒருமித்த சிந்தனையோடு ஈழத் தமிழினமும், புலம் பெயர்ந்த ஈழத்தவர்களும் தலைநிமிர்ந்து வாழ்கின்ற காலமிது.

ஆனால் - அன்றைய ஆண்டு அதாவது 1983ஆம் ஆண்டு சிங்கள பௌத்த பேரினவாதத்தின் எதிர்பார்ப்பும், சிந்தனையும் வேறுவிதமாகவே இருந்தது. அன்றைய



அமைச்சரான காமினி திஸநாயக்கவின் உரையை நாம் எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

1983ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதியன்று ஐக்கிய தேசிய் கட்சியின் அமைச்சரான காமினி திஸநாயக்க பின்வருமாறு கொக்கரித்தார்.

'உங்களைத் தாக்கியது யார்?
சிங்களவர்கள்!
உங்களைக் காப்பாற்றியது யார்?
சிங்களவர்கள்!

ஆமாம், எங்களால் தான் உங்களைத் தாக்கவும், காப்பாற்றவும் முடியும்! உங்களைக் காப்பாற்ற இந்திய இராணுவம் இங்கே வருமாக இருந்தால் அதற்கு 14 மணித்தியாலங்கள் தேவை! ஆனால், 14 நிமிடங்களுக்குள் இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு தமிழனின் இரத்தத்தையும், இந்த நாட்டுக்காக நாம் அர்ப்பணிப்போம். உங்களுடைய நெற்றிகளில் நீங்கள் ஒரு யாழ்ப்பாணத் தமிழன் என்றோ, மட்டக்களப்புத் தமிழன் என்றோ, மலையகத் தமிழன் என்றோ, இந்துத் தமிழன் என்றோ, கிறிஸ்தவத் தமிழன் என்றோ எழுதப்படவில்லை! எல்லோருமே தமிழர்கள்தான்!

ஆனால், பின்னாளில் தமிழீழ மக்களின் அமைதி கொல்லும் படையாக வந்திறங்கிய இந்திய இராணுவத்தையும், இலங்கை இராணுவத்தையும் தமிழ் விடுதலைப் புலிகள் தோற்கடித்து துரத்தியதை வரலாறு கூட வியந்து தான் கூறும்.

1983 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதியன்று நியூயோர்க் வொஷிங்டன் - போஸ்ட் பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் தீர்க்கதரிசனமான கருத்தொன்றைக் கீழ்வரும் பொருள்பட எழுதியது -

'சேர்ந்து வாழ்வது இவ்வளவு கஷ்டமென்றால் ஏன் பிரிந்து வாழ முடியாது? தமிழ் மக்களுக்குத் தனி ஆட்சி கொடுத்தால் என்ன? ஐக்கிய நாடுகள் சபையில் உள்ள பல நாடுகள் போல் தமிழ் மக்களும் தாங்கள் ஒரு தனித்துவமான தேசம் என்பதற்குரிய சரியான சான்றுகளை வைத்திருக்கிறார்கள். இந்த ஒருங்கிணைந்த இலங்கைத்தீவில் சிங்களவர்கள் மட்டுமே அதிகாரங்களை வைத்திருக்கிறார்கள். இந்த அதிகாரங்களைக் கொண்டுள்ள சிங்களவர்களுக்குத் தமிழர்கள் இந்த ஒருங்கிணைந்த இலங்கையில் வாழமுடியாத அளவில் நடத்தப்பட்டிருக்கிறார்கள் என்ற அறிவாவது உள்ளதா? என எழுதியிருந்தது.

1983ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் நடைபெற்ற தமிழின படுகொலைகளின் மூலம் உலக நாடுகள் யாவும் முதன் முறையாக விழித்தெழுந்தன. ஆனால், ஒரே ஒரு நாடு மட்டும் விழித்தெழவேயில்லை. விழித்தெழாத அந்தநாடு வேறெந்த நாடும் அல்ல. சிங்கள பௌத்த நாடான இலங்கையேதான். அதன் அன்றைய ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தன் அன்று நடந்து கொண்ட விதமும், பேசிய பேச்சுகளும் ஒரு சிங்கள பௌத்த பேரின்வாதியின் சிந்தனைகளை அப்படியே பிரதிபலித்தன. தமிழினப் படுகொலைகள் நடைபெற்று தமிழர்களின் சொத்துகளும் நாசமாக்கப்பட்ட, நாசமாக்கப்படுகின்ற அந்த வேளையில் அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி அரசு நடந்து கொண்ட விதங்கள் ஏற்கனவே ஆவணப் படுத்தப்பட்டு அவற்றின் சிலவற்றை - இங்கே தருகிறோம்.

1983 ஆம் ஆண்டு ஜூலை 24 ஆம் திகதி இரவிலிருந்து தொடர்ந்து இலங்கைத் தீவே எரிந்து கொண்டிருந்த போதும், அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன மௌனமாகவே இருந்தார். ஐந்து கோரமான நாட்களுக்குப் பின்னர்தான் அதாவது - ஜூலை 28 ஆம் திகதி வியாழக்கிழமை இரவுதான் ஜனாதிபதி ஜெயவர்த்தன முதன்முதலாக இனக்கலவரம் குறித்து நாட்டு மக்களுக்குத் தொலைக்காட்சியில் உரையாற்றினார். அப்போது கூட தமிழ்மக்கள் மீது நடத்தப்பட்டு வருகின்ற இந்த இனப்படுகொலைகள் குறித்து அவர் வருத்தம் தெரிவித்தோ, கவலை தெரிவித்தோ, அனுதாபம் தெரிவித்தோ ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. மாறாக இந்தக் கோரமான இனப்படுகொலைகளை நியாயப்படுத்தும் விதத்திலேயே ஜனாதிபதி ஜே.ஆரின் உரை அமைந்திருந்தது.

1956 ஆம் ஆண்டிலிருந்து தமிழ் மக்கள் மீது சிங்கள மக்கள் கொண்ட நம்பிக்கையின்மை வளர்ந்து வந்ததன் வெளிப்பாடே இந்த இனக்கலவரங்கள் என்றும், இவ்வாறான மனக்குறைகள் சிங்கள மக்களுக்கு இருக்கும் பட்சத்தில் அவர்கள் (அதாவது சிங்களவர்கள்) வன்முறையில் ஈடுபடுவது எளிதான செயலாகும்? என்றும் ஜே.ஆர்.ஜெயவர்த்தன அன்று தெரிவித்தார்.

அத்தோடு மட்டும் அவர் நிறுத்திக் கொள்ளவில்லை. அவர் மேலும் இவ்வாறு கூறினார். சிங்கள மக்களை அமைதிப்படுத்துவதற்காகவும், அவர்களுடைய இயல்பான வேட்கையைப் பூர்த்தி செய்வதற்காகவும், ஒரு புதிய சட்டத்தை நான் அமுலாக்க இருக்கிறேன். இந்தப் புதிய சட்டத்தின் பிரகாரம் நாட்டுப் பிரிவினை கோரும் எவரும் இந்த நாடாளுமன்றத்தில் அங்கத்தவர்கள் ஆகமுடியாது. அதுமட்டுமல்ல, நாட்டுப் பிரிவினை கோரும் எந்த ஒரு கட்சியும் தடை செய்யப்படும். இனிமேல் நாட்டைப் பிரிப்பது குறித்து எவரும் சட்ட ரீதியாக செயற்பட முடியாது.

இது குறித்து TAMIL NATION இணையத் தளம் பின்வருமாறு குறிப்பிட்டது.

'சிங்கள ஜனாதிபதி தமிழர்களின் நிலை குறித்து கவலை தெரிவிக்கவில்லை. ஏனென்றால், தமிழர்கள் குறித்து அவர் கவலைப்படவில்லை. இலங்கை ஜனாதிபதி தமிழர்களுக்கு நேர்ந்ததையிட்டு அனுதாபம் தெரிவிக்கவில்லை. ஏனென்றால் - ஜனாதிபதி தமிழர்கள் மீது அனுதாபம் கொண்டிருக்கவில்லை. ஜனாதிபதி தமிழர்களுக்கு நேர்ந்த கதி குறித்து பேரதிர்ச்சி தெரிவிக்கவில்லை. ஏனென்றால், அன்று தமிழர்களுக்கு ஏற்பட்ட கதி ஜனாதிபதிக்கு பேரதிர்ச்சி தரக்கூடியதாக இருக்கவில்லை."

ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட நிலை குறித்து அதிர்ச்சியோ, அனுதாபமோ, வருத்தமோ தெரிவிக்கவில்லை என்பதைக் குறிப்பிட்ட International Commission of Jurist 1983 டிசெம்பரில் ஓர் அறிக்கையில் தெரிவித்திருந்தது.

1983 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி வெளிவந்த ECONOMIST சஞ்சிகையும் இதே கருத்தைத்தான் பிரதிபலித்தது. உலகளாவிய வகையில் இலங்கை அரசுக்கு எதிராகக் கண்டனங்க்ள் எழுந்தன. இலங்கையின் சிங்கள பௌத்த மேலாண்மையை மட்டும் உறுதி செய்கின்ற அரசியல் யாப்புக் குறித்துக் கடுமையான விமர்சனங்கள் வைக்கப்பட்டன.

ஜூலை 83 இனக்கலவரத்தில் கோரமும், அழிவும் முழுமையாக ஆவணப்படுத்தப்பட்டு மக்கள் முன் வைக்கப்படவில்லை. இதைப் பற்றி சிந்திக்கும்போது முன்பு உலக நாடுகளால் 'பயங்கரவாதி' என்று அழைக்கப்பட்டு பின்னாளில் உலகத் தலைவர்களில் ஒருவராக மதிக்கப்பட்ட நெல்சன் மண்டேலாவின் கூற்று ஒன்று எமது ஞாபகத்துக்கு வருகிறது. வேறு ஒரு சந்தர்ப்பத்தில் நெல்சன் மண்டேலா கூறியது ஜூலை 83 இனக்கலவரத்துக்குப் பொருத்தமாகவே அமைந்துள்ளது.

நெல்சன் மண்டேலா கூறியது இதுதான் -
'மன்னிக்கவும், மறக்கவும் வேண்டுமானால் என்ன நடந்ததென்ற முழு உண்மையும் எமக்குத் தெரிய வேண்டும்!'

இன்று - இந்த 2006 ஆம் ஆண்டு - இலங்கையின் புதிய ஜனாதிபதியாக விளங்கும் மகிந்த ராஜபக்ஷவின் 'சிந்தனைகளும்' அவருடைய முன்னோடிகளின் சிங்கள பௌத்தப் பேரினவாத சிந்தனைகளையே பிரதிபலிக்கின்றன. மகிந்த ராஜபக்ஷவின் முப்படைகள் இன்று வெளிப்படையாகவே தமிழர்களைக் கொன்று குவித்து வருகின்றன. ஈழத் தமிழினத்தின் மீது வலிந்து ஒரு பாரிய போரைத் திணிப்பதற்காக இன்று அரசு தமிழினத்தின் மீதான தனது படுகொலைகளை முடுக்கி விட்டிருக்கிறது.

அடிப்படையில் எந்தச் சிங்கள அரசும் தமிழினத்துக்குச் சமாதானத்தைத் தரப் போவதில்லை.

மாறாக சிங்கள அரசுகள் தமிழினத்தை அழித்தொழிக்கும் செயற்பாடுகளைத்தான் முன்னரைப்போல் தொடர்ந்தும் முன்னெடுக்கும்.

ஈழத் தமிழினம் தனது பாதுகாப்புக்கும், தனது பொருளாதார நலனுக்கும், அதன் மேம்பாட்டுக்கும் தன்னைத்தானே நம்பியிருக்க வேண்டும். தனது சொந்தப்பலத்தில் நிமிர்ந்து நிற்க வேண்டும்.

அவுஸ்ரேலியாவிலிருந்து -
சபேசன்


நன்றி - இணையத்தளம்

# இலங்கை அரசை கலங்க வைத்த மில்லரின் கரும்புலித் தாக்குதல்!

**நாடாளுமன்ற உறுப்பினர் மா.க. ஈழவேந்தன்**

உலக விடுதலை வரலாற்றை உன்னிப்பாக கவனிக்கும் எவரும் தமிழீழ விடுதலைப்புலிகள் போன்ற வீரம் செறிந்த வரலாற்றைப் படைக்கும் ஒரு இயக்கம் இல்லை என்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

விடுதலைப் புலிகளின் வீர வரலாற்றை நாம் எண்ணுகின்றபோது நெல்சன் மண்டேலாவின் தலைமையில் தென்னாபிரிக்காவில் நடைபெற்ற கறுப்பர்களின் போராட்டத்தையும், மறைந்த தலைவர் அரபாத்தின் தலைமையில் நடைபெற்ற பலஸ்



தீன விடுதலை இயக்கத்தையும் ஒப்பு நோக்குவதுண்டு.

இன்று தென்னாபிரிக்காவில் கறுப்பர் விடுதலை பெற்றுள்ளனர். பலஸ்தீனத்தைப் பொறுத்தவரையில் யசீர் அரபாத்தின் மறைவையடுத்து அங்கு குழப்ப நிலை அங்கு நிலவுகிறது.

பலஸ்தீனத்தைப் பொறுத்த வரையில் இழந்த நாட்டை மீட்பதற்காக போராடுகிறார்கள். நாமோ இருக்கின்ற நாட்டை இழக்காதிருக்கப் போராடுகிறோம்.

மேற்குறித்த இரு நாடுகளுக்கும் வெவ்வேறு நாடுகளில் ஆதரவு இருந்தது. தமிழீழ விடுதலைப்புலிகள் உலக நாடுகளின் ஆதரவற்ற நிலையிலும், எதிர்ப்புக்கிடையிலும் போராட்டத்தை தொடர்கின்றனர்.

எனினும், பொதுக் கட்டமைப்புக்கு அரசும், விடுதலைப் புலிகளும் கையொப்பமிட்ட நிலையில் உலக நாடுகளின் ஆதரவு ஓரளவு எம் சார்பில் உருவாகி வருவது வரவேற்கத் தக்கது.

விடுதலைப் புலிகள் போன்று வீரம் செறிந்த வரலாற்றை, தியாகம் நிறைந்த வரலாற்றை வேறு எவரும் நிலைநாட்டியதில்லை. இத்தகைய வீரமண் செறிந்த தியாகம் படைத்த விடுதலைப் புலிகளின் பிரிக்க முடியாத அங்கமாக விளங்குவதுதான் கரும்புலிகள். கரும்புலிகள் என்ற சொற்றொடர் இன்று உலகம் முழுவதும் பயபக்தியோடு பேசப்படுகின்ற சொல்லாட்சியாக விளங்குகிறது.

தம் உயிரை துச்சமென மதித்து சாவா, வாழ்வா என்று கரும்புலிகள் நடத்துகின்ற போராட்டத்தைக் கண்டு உலகமே வியப்பில் மூழ்கியுள்ளது.

ஒரு சமுதாயத்துக்காக ஒரு தனி மனிதன் சாகத் துணிவானாயின் அந்தச் சமுதாயம் வாழும் என்று அண்ணல் காந்தி கூறியுள்ளார். ஈழத் தமிழரைப் பொறுத்தவரையில் எமது விடுதலை வேட்கையை நிறைவேற்ற ஒருவர் மட்டுமல்ல ஆயிரக் கணக்கில் சாகத் துணிந்துள்ளோம். முன்பு கரும்புலிகளை வர்ணிக்கும் போது தற்கொலைப்படை என வர்ணிப்பதுண்டு.

அந்தச் சொல் போதியளவு தக்க பொருளை உணர்த்தாத நிலையில் அது இப்பொழுது தற்கொடைப் படையாக மாற்றப்பட்டுள்ளது. இது தன் கொள்கைக்காக, இனத்துக்காக, நாட்டுக்காக தம்மைக் கொடுக்க முன் வந்தோர் என்ற பொருளை உணர்த்தி நிற்கிறது. தமிழீழ விடுதலைப்புலிகளின் பல்வேறு போர் வடிவங்களில் மிக உயர்ந்ததும், உன்னதமுமான போர் வடிவம்தான் கரும்புலித் தாக்குதல் ஆகும்.

தன்னை இழந்து அல்லது எதிரிகள் பலரை அல்லது எதிரிகள் பல மிக்கதொரு இலக்கை அழிக்கக் கூடிய படையணி ஒன்றை அமைக்கும் எண்ணத்தை தமிழீழத் தேசியத் தலைவர் தொடக்கத்திலிருந்தே கொண்டிருந்தார். அந்த எண்ணக் கரு செயல் வடிவம் காண படிப்படியாக உயிர்த் தியாகம் செய்யும் வீரர்களை எம் தலைவர் உருவாக்கி வந்தார்.

சிங்களப் படை ஒப்பரேசன் லிபரேசன் என்ற பெயரில் படைநடவடிக்கை வாயிலாக வடமராட்சியை கைப்பற்றி, உளவியல் அடிப்படையில் தாம் பெரும் வீரர் என்ற எண்ணத்தைக் கொண்டிருந்தனர்.

இத்தகைய உளவியல் வளர்ச்சியை சிங்களப் படைகொண்டிருப்பது எமக்கு ஆபத்து என்று உணர்ந்த நம் தேசியத் தலைவர் ஒரு கரும்புலித் தாக்குதலை நடத்த வேண்டிய தேவை உண்டு என்பதை அவர் உணர்ந்து அதற்கு செயல் வடிவம் கொடுத்தார்.

1987 ஆம் ஆண்டு யூலை 5 இல் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த சிங்கள இராணுவ முகாமுக்குள் முதலாவது கரும்புலிவீரன் புகுந்து அந்த முகாமைச் சுக்குநூறாக்கினான். சிங்கள அரசையும், அதன் படைப்பலத்தையும் கிலிகொள்ளச் செய்த அந்த முதலாவது கரும்புலித் தாக்குதலை இனிதே நிறைவேற்றி வைத்தவர் கரும்புலி கப்டன் மில்லர்.

இந்தத் தாக்குதலையடுத்து இன்று வரை உலகம் வியக்கும் வகையில் பல கரும்புலித் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன. இந்தக் கரும்புலித் தாக்குதலில் இறப்பில் இன்பம் கண்ட வீரர்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே போகும். தாக்குதல் நடத்தப் போகும் கரும்புலிகள் திரும்பி வரும் எண்ணத்தோடு போவதில்லை.

'உயிர் நமக்கு வெல்லம் அல்ல உணருவாய் நற்தமிழனே' என்று ஓங்கி ஒலித்துக் கொண்டுதான் களம் புகுகின்றார்கள். இந்தப் போரில் வெற்றிக்குப் பின் திரும்புவோர் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. வெற்றியோடு சாவை இறுக அணைத்தோரின் எண்ணிக்கையே அதிகம்.

சாதாரண போராட்டத்தில் வெற்றி பெற்று திரும்பலாம் என்ற நம்பிக்கை சிலருக்கு இருக்கலாம். ஆனால், கரும்புலிகளைப் பொறுத்தவரையில் தாம் களத்தில் இறப்பது உறுதி என்ற நிலையில் தான் களம் புகுகிறார்கள்.

கரும்புலிகள் வெடிமருந்தை தங்களுடன் எடுத்துச் செல்கிறார்கள். எதிரிகளின் படைப்பலம் பற்றி இவர்கள் அக்கறை கொள்வதில்லை. விளைவைப் பற்றிப் பொருட்படுத்தாது தம் பலத்தையே நம்பி இவர்கள் களத்தில் குதிக்கிறார்கள். இவர்களின் தாக்குதல் - தரை, கடல், வான்படைகளையும் உள்ளடக்கும் இவற்றின் பொருளை நாம் விபரிக்கத் தேவையில்லை.

நெல்லியடியில் நடத்திய தாக்குதல் இந்திய அரசையும், உலக நாடுகளையும் அதிர்ச்சி கலந்த வியப்பில் ஆழ்த்தியது. சாகத்துணிந்த எம்மை நீ என்ன செய்யப் போகிறாய் என்று கேள்வி கேட்கின்ற வகையில் இந்தப் போராட்டம் நடந்தது.

1987 ஆம் ஆண்டு யூலை 5 இல் மாவீரன் மில்லரின் தலைமையில் நடத்திய கரும்புலித் தாக்குதல் ஈழத் தமிழ் மக்களோடு சிங்களவராகிய் தம்மால் நேரடியாக மோதி வெற்றி பெற முடியாது என்பதை உணர்ந்த 20 ஆம் நூற்றாண்டில் மிகப் பெரிய குள்ளநரியாகிய ஜே.ஆர்.ஜெயவர்த்தன வேறு வழியற்ற நிலையில் தனது நிரந்தர எதிரியான இந்தியாவின் காலில் விழுந்து தம்மைக் காப்பாற்றும்படி கேட்கும் நிலையை ஏற்படுத்தியது.

இந்தத் தாக்குதலின் விளைவாகத்தான் - ஜே.ஆர்.ஜெயவர்த்தனா-ராஜீவ் இடையில் இந்திய அரசுடன் இலங்கை - இந்திய ஒப்பந்தம் செய்ய வேண்டிய நிலையை உருவாக்கியது. 1987 ஆம் ஆண்டு யூலை 5 இல் நடத்திய மாபெரும் தாக்குதல் எம் நெஞ்சிலும், எம்வழித் தோன்றல்களின் நெஞ்சிலும் நிலைத்து இடம் பெறுவது உறுதி.




## துயரம் தீர்க்கும் அம்பிகை தாயே!

*அலை பாயும் ஆழ்கடலில் அடியார் கூட்டம்*
*ஆர்ப்பரித்து கரையேறி அருளே சேர்க்க*
*தலைவாயின் கோபுரத்தின் முன்னே கூடித்*
*தம்வசத்தை இழுத்து நின்ற தாயே!*
*நிலையான உன்னுருவம் நினைந்து உள்ளம்*
*நெஞ்சுருக நின்றுருகும் கைலைக்காட்சி*
*சிந்தனையே உன் சிறப்பன்றே இந்த நாட்டின்*
*செந்தமிழர் படும் துயரம் தீர்த்துவைப்பாய்!*
*வந்தனைகள் உன்னடிக்கே ஆக்கி நின்றோம்*
*வரம் தந்து எம்மைக் காத்து வாழவைப்பாய்.*

கு.மேகலா
நயினாதீவு

## LONDON ENGLISH COLLEGE

**புதிய ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பம்**

**A/L** பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான விசேட கற்கைநெறி......

**Diploma in English**

Week days classes
Mon Wed Fri – 9am - 12noon
Start on 12.07.2006

Reading
Writing
Listening
Speaking

தனித்தனி ஆசிரியர்களின் வழிகாட்டலில் ஒவ்வொரு திறனையும் கற்றுக்கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்....

கற்கைநெறி முடிவில் பரீட்சை நடாத்தப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படும்

## Spoken English

பாடசாலை மாணவர்கள், அலுவலகப் பணியாளர்கள் மற்றும் ஆங்கிலம் பேச விருப்பமுள்ள அனைவருக்குமான கற்கைநெறி....

FREE STUDY PACK

Week days classes Start on... 11.07.2006
Tue Thu – 4pm-5pm
3 Months

வகுப்பில் மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களே அனுமதிக்கப்படுவர்.

105, Arasady Road, Jaffna.
021 222 5889, 0779508972

BSNS [C/5443]





அன்புள்ளநீர் அகமெல்லாம் பொங்கப் பொங்க அறமெழுந்து பெருஞ்சேவை ஆற்றஆற்றத் தொண்டு செயப்பல அன்பர் தோன்றத் தோன்ற தோற்றுசுவைச் சோறாக உண்ண உண்ணக் கண்டுவரும் அடியார்கள் ஆர்ப்ப ஆர்ப்ப கடி அமுதசுரபியினாள் ஊட்ட ஊட்டக் கொண்டு பசி தீர்வார்கள் கோடி கோடி கோடானு காலமெல்லாம் வாழிவாழி.

## நயினாதீவு - ஸ்ரீ நாகபூஷணி
## அமுதசுரபி அன்னதானசபை

### "அமுதசுரபி இறைபயணிகள் இல்லம்" ஆரம்ப விழா அழைப்பு

**அம்பிகை அடியார்களே!**

நிகழும் மங்களம் பொங்கும் விய வருடம் ஆனித்திங்கள் 21ஆம் நாள் புதன்கிழமை (05.07.2006) இன்று அம்பிகையின் உயர்திருவிழா 10ஆம் நாள்) முற்பகல் 10 மணியளவில் எமது சபையின் ஆரம்பகால நிறுவுநர்களைக் கௌரவிக்கும் முகமாக புதிதாக அமைக்கப்பெற்ற "அமுதசுரபி இறை பயணிகள் இல்லம்" என்ற அடியார்கள் தங்ககம் ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையின் திருவருட் கடாட்சத்தினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதென்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம். இந் நல்விழாவில் அடியார்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

### நிகழ்வுகள்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வீதியில் இருந்து விழா நாயகர்களையும் பிரமுகர்களையும் மங்கள வாத்திய சகிதம் அழைத்து வரல்,

**மங்கள விளக்கேற்றல்**
*திரு.வே.மு.சண்முகராசா அவர்கள்*
[ஆரம்பகால நிறுவுநர் அமுதசுரபி, தலைவர் - நயினாதீவு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம், சாயி சமித்தி செயலாளர் - நயினாதீவு]

**அமுதசுரபி இறைபயணிகள் இல்லத்தை நாடாவை வெட்டித் திறந்து வைத்தல்**
*உயர்திரு. நாகமுத்து காராளபிள்ளை அவர்கள்*
[உரிமையாளர் - விக்னேஸ்வரா களஞ்சியம், நயினாதீவு ஆரம்ப கால நிறுவுநர் அமுதசுரபி, அன்னதான சபை முன்னாள் பொருளாளர் - அமுதசுரபி அன்னதான சபை]

**இறைவணக்கம்:**
*செல்வன் பொ.வீரகேசன் அவர்கள்*

**தலைமையுரை :**
*திரு. தம்பிமுத்து சிவானந்தன் அவர்கள்*
[தலைவர் - அமுதசுரபி அன்னதான சபை]

**வரவேற்புரை:**
*திரு. அருளம்பலம் சண்முகநாதன் J.P. அவர்கள்*
[தர்மகர்த்தா சபை உறுப்பினர் - அமுதசுரபி அன்னதான சபை]

**ஆசி உரைகள்:**
*சிவஸ்ரீ ப.முத்துக்குமாரசுவாமிக் குருக்கள்*
[உயர் திருவிழாக்கால பிரதம சிவாச்சாரியார் - ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம்]
*சிவஸ்ரீ ஜம்புகேஸ்வரக் குருக்கள் மகேஸ்வரக் குருக்கள் அவர்கள்*
[நித்திய பரம்பரை சிவாச்சாரியார் - ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம்]

**வாழ்த்துரைகள்:**
*திரு.கா.ஆ.தியாகராசா அவர்கள்*
[முன்னாள் உதவி அரசாங்க அதிபர் - தீவகம் தெற்கு]
*கலாநிதி மா.வேதநாதன் P.H.D அவர்கள்*
[முதுநிலை இந்துநாகரிக விரிவுரையாளர் - யாழ். பல்கலைக்கழகம்]
*திரு.கனகசபாபதி நாகேஸ்வரன் M.A அவர்கள்*
[முதுநிலை தமிழ்த்துறை விரிவுரையாளர் - சப்ரகமுவ பல்கலைக்கழகம்]
*திரு.சின்னத்தம்பி தன்பாலசிங்கம் அவர்கள்*
[தலைவர் - அறங்காவலர் சபை வீரபத்திரர் ஆலயம் - நயினாதீவு]

**மண்டப நிர்மாணப் பணியாளர்களுக்கு பொன்னாடை போர்த்து பொற்கிளி வழங்கி கௌரவித்தல்**
*கௌரவ சபை உறுப்பினர்கள்*

**நிர்மாணப் பணியாளர்கள் கௌரவிப்பு உரை:**
*திரு.மதியாபரனம் அம்பிகைபாகன்*
[உபதலைவர் - அமுதசுரபி அன்னதான சபை]

**நன்றியுரை:**
*திரு. குமாரசுவாமி சாந்தலிங்கம் அவர்கள்*
[கௌரவ செயலாளர் - அமுதசுரபி அன்னதான சபை]

**குறிப்பு:** நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மனைத் தரிசிக்கவரும் அடியார்களின் நன்மை கருதி வழமைபோல அன்னதானப்பணி சிறப்புற அமுதசுரபி மண்டபத்தில் நடைபெறுகின்றது. அத்துடன் நமது எதிர்கால சந்ததியின் சைவசமயப் பற்றையும் அறிவையும் மேம்படுத்தும் நோக்கில் அமுதசுரபி அறநெறி பாடசாலையும் நடத்தப்படுகின்றது.

"மண்ணிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும் அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்"

அமுதசுரபி மண்டபம்,
பிரதான சாலை, நயினாதீவு - 2.
தொலைபேசி : 060 2213575
பதிவு எண் : S 236

நிர்வாகத்தினர்.

[C/5440]

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கரும்புலி நாளை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்குமாறு வேண்டுகோள்

யாழ்ப்பாணம் —

தாயக விடுதலைப் போரில் தமது இன்னுயிர்களை அர்ப்பணித்த கரும்புலி மாவீரர்களின் நினைவுதினத்தை உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்குமாறு யாழ். மாவட்ட அரசியல்துறை பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது -

தியாக உணர்விலே தம் உயிரோடு சேர்ந்த உணர்வை முழுமையாக அர்ப்பணித்த உத்தமர்களாம் எம் கரியபுலிகளின் நினைவு நாள் இன்றாகும்.

ஈழவிடுதலையை மூச்சாகக் கொண்டு எதிரியின் தடைகளை உடைக்க தலைகள் கொடுத்து வீரியமாய் தம்முயிரை வெடியாக்கி விடியலைத்தேடிப் புறப்பட்ட கரும்புலி வீரர்களின் உன்னத நாளாகும். இந்த கருவேங்கைகளின் சவாலான வாழ்வை என்றும் எம் தேச மக்கள் மறக்கமாட்டார்கள் .

இந்த நாளில் - எம் தேசத்தை நேசிக்கின்ற எம் பாச மக்கள் அனைவருக்கும் இந்த வீரத் திலகங்களின் விடுதலை உணர்வை நினைவுகூர வேண்டிய கடமை ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் உண்டு என்பதை நாம் எடுத்தியம்புகின்றோம்.

சாவைக்கண்டு - சாவெதிரே சென்று வெடித்து தேசத்தை மீட்டு தேசியம் நிலைநாட்டிய வேங்கைகளை என்றும் மறவாது எம் தேசம்.

குறிப்பாக யாழ். குடாநாட்டில் மக்கள் அனைவரும் இந்தக் கருவேங்கைகளின் பெருநாளை அனுஷ்டித்து நினைவு கொள்வோமென்று அந்த அறிக்கையில் மேலும் .தெரிவிக்கப் பட்டுள்ளது.

# இலங்கை அணி சாதனை



அம்ஸ்ரெல்வீன் —

இலங்கை - நெதர்லாந்து அணிகளுக்கிடையே அம்ஸ்ரெல்வீனில் நடைபெற்ற சர்வதேச ஒருநாள் போட்டியில் ஜெயசூர்ய, டில்ஷான் ஆகியோரின் அதிரடி ஆட்டத்தின் மூலம் 9 விக்கெட் இழப்புக்கு 443 ஓட்டங்களைப் பெற்று சாதனை படைத்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு - ஜெயசூர்ய, டில்ஷான் ஆகியோரின் அதிரடி ஆட்டத்தின் மூலம் இந்த ஸ்கோரை எட்ட முடிந்தது.

இதன் மூலம் தென்னாபிரிக்க அணியின் சாதனையான 434-4 என்ற சாதனையை முறியடித்து புதிய சாதனை படைத்தது இலங்கை அணி.

இதில் முதல் 10 ஓவர்களில் 94 ஓட்டங்கள் பெறப்பட்டது. தொடக்க ஆட்டக்காரர் தரங்க 18, சங்ககார 46, டில்ஷான் ஆட்டமிழக்காமல் 79 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 14 பவுண்டரிகள் அடங்கலாக 117, ஜெயசூர்ய 104 பந்துகளில் 1 சிக்ஸர், 24 பவுண்டரிகள் அடங்கலாக 157 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்தப் போட்டியில் ஆடியதன் மூலம் ஜெயசூர்ய ஒருநாள் போட்டிகளில் 363 போட்டிகளில் ஆடி அதிகூடிய ஒருநாள் போட்டிகளில் ஆடியவர் என்ற சாதனையையும் படைத்தார்.

இந்தப் போட்டி இலங்கை அணி விளையாடிய 500 ஆவது போட்டியாகும்.

# நெல்லியடியில் துப்பாக்கிச் சூடு இரண்டு படையினர் காயம்!

நெல்லியடி —

நெல்லியடி - புதுதோட்டம் பகுதியில் இராணுவத்தினர் மீது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் காயமடைந்தனர்.

நேற்று காலை 10.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தை அடுத்து அந்தப் பகுதியை சுற்றிவளைத்த படையினர் தேடுதல் நடத்தினர். இதன்போது ஒன்பது பேர் கைது செய்யப்பட்டு ஏழு பேர் விசாரணை களின் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

கொடிகாமம் மேர்வின் வீதியைச் சேர்ந்த ஐயாத்துரை அகிலேஸ்வரன் (வயது 27) துன்னாலை குடவத்தையைச் சேர்ந்த விறகு வியாபாரியான தங்கராசா தர்மகுலசிங்கம் ஆகிய இருவரும் நெல்லியடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (12)

## திருமலையில் சூடு மூவர் காயம் !

திருகோணமலை —

திருகோணமலை - உப்புவெளியில் நேற்றுக் காலை மீனவர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூவர் காயமடைந்தனர்.

நேற்றுக் காலை 6 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமுற்ற மூவரில் ஒருவர் புளொட் இயக்க உறுப்பினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

காயமுற்ற மூவரும் திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## முஸ்லிம்...

திருகோணமலை வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## பெண்கள் மீதான...

செந்தமிழ்ச்செல்வன் கோரிக்கை மனுவைக் கையளித்தார்.

இந்த மனுவை யுனிசெஃப் தலைமைச் செயலாளர் நாயகத்துக்கு அனுப்பிவைத்து, அவரின் தகவலை அறியத்தருவதாக அவர் உறுதியளித்தார்.

இந்த நிகழ்வில் சுவிற்சலாந்து தமிழ்ப் பெண்கள் அமைப்பின் பிரதிநிதி நிர்மலா பரராஜசிங்கம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இத்தகைய கவனயீர்ப்பு போராட்டங்கள் சுவிற்சலாந்தில் தொடர்ந்தும் நடத்தப்பட உள்ளன. இந்தக் கவனயீர்ப்பு ஒன்று கூடலில் டொச் மொழியிலான தகவல்கொத்தும் விநியோகிக்கப்பட்டது.

## அவசரகால...

என தெரிவிக்கப்பட்டிருக்கிறமை அதன் இரட்டைக் கொள்கையை புலப்படுத்துகிறது.

அரசாங்கம் அவசரகாலநடைமுறையில் இராணுவ தலைமை அதிகாரிகளுக்கு பாதுகாப்பு வழங்க தவறியநிலையில் நாம் எவ்வாறு இந்த நிலைமையை தொடர்ச்சியாக அனுஷ்டிக்க முடியுமென அவர் மேலும் தெரிவித்தார்.

## மனித உரிமை...

தடுத்துவைப்பதற்கும் உள்ள அதிகாரம் - உரிய அதிகாரியைத் தவிர வேறெவரும் அவசரகாலச்சட்டத்துக்கு அமைவாகவோ,பயங்கரவாத சட்டத்துக்கு அமைவாகவோ, கைது செய்வதற்கும், தடுத்துவைப்பதற்கும் அதிகாரம் இல்லை என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

## நாடெங்கும்...

குவிக்கப்பட்டிருப்பதுடன் - வீதிச் சோதனை நடவடிக்கைகளும், தேடுதல்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், எந்தவேளையிலும் எதையும் எதிர்கொள்ளத்தக்க தயார் நிலையில் இருக்குமாறு படையினருக்கும், அத்தியாவசிய சேவைகள் துறையினருக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, கொழும்பு நகரில் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், நாட்டின் வடக்கு - கிழக்கில் உள்ள படைமுகாம்கள், விமானப் படைத் தளங்கள், துறைமுகங்களிலும் கரும்புலிகள் நாளை முன்னிட்டு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

படையினரை இலக்குவைத்து இங்கு தாக்குதல்கள் நடைபெறக் கூடும் என இராணுவப் புலனாய்வுத் துறை விடுத்த எச்சரிக்கையை அடுத்து படைத்தளங்கள் படையினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு இராணுவத் தலைமையகம் உத்தரவிட்டிருக்கிறது.

கடந்த சில வருடங்களுக்கு பின்னர் இம்முறை கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு பதற்றமான சூழலை நாடு எதிர்கொள்வதாக கொழும்பில் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# வரதர் அணி உறுப்...

சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றனர்.

நேற்றுக்காலை அந்தக் கிணற்றடிக்குச் சென்ற அந்தப்பகுதி மக்கள் சூட்டுக்காயங்களுடன் மேற்படி நபரின் சடலத்தைக் கண்டுபிடித்தனர்.

அத்துடன், நேற்றுமுன்தினம் இரவு மேற்படி நபரைக் கூட்டிச்சென்ற இனந்தெரியாத நபர்கள் மதுபானத்தை வாங்கிக்கொடுத்து போதையேற்றியபின்பே சுட்டுக்கொன்றிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஏனெனில், சடலம் கிடந்த பகுதியில் பல மதுபானப்போத்தல்களும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

உயிரிழந்தவரின் சடலம் மேலதிக விசாரணைக்காக யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (206)

# புலிகளை மீண்டும்...

எமது கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து இயங்கவில்லை.

ராஜீவ் கொலை தொடர்பாக அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் மூலம் ஒரு தகவலைத் தெரிவித்திருப்பதாகவே நான் உணருகிறேன்.

அமைதித்தீர்வுக்கான திட்டம் எம்மிடம் கண்டிப்பாக உள்ளது. நாம் இதுதொடர்பாக குழு அமைத்துள்ளோம். அதில் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகள், புத்திஜீவிகள், சட்டவல்லுனர்கள் மற்றும் அரச பணியாளர்கள் இடம்பெற்றுள்ளனர். இது தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் பலமுறை தொடர்பு கொண்டுள்ளோம்.

அவர்களின் ஆசீர்வாதத்துடன் மாகாணசபை போன்றதொரு அமைப்பை உருவாக்க எமது அரசியல் யாப்பின் 13 ஆவது சரத்தில் திருத்தம் மேற்கொள்ள முனைகிறோம். ஆனால், அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

சந்திரிகா குமாரதுங்க காலத்திலும்கூட மற்றொரு அரசியல் யாப்பு திருத்தம் கூட்டாட்சி தொடர்பாக கொண்டுவரப்பட்டது. ஆனால், அதையும் அவர்கள் நிராகரித்தனர்.

நாம் ஒரு வரைபைக் கொடுக்க தயாராக உள்ளோம். விடுதலைப் புலிகளும் உட்கார்ந்து பேசி அவர்களுக்கு என்ன தேவையோ அந்தக் கருத்தைக் கூறட்டும். அவர்கள் விவாதிக்கட்டும். நானோ, பிரபாகரனோ அனைவரும் இலங்கையர்தான்.

ஆகையால், நாங்கள் உட்கார்ந்து பேசுவோம். நான் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் உங்களுக்கு என்ன தேவையோ அதை வந்து விவாதியுங்கள். அவர்கள் திருத்தம் செய்யட்டும். நாம் வரைபைத் தருகிறோம்.

நீங்கள் இதைத்தான் ஏற்கவேண்டும் என்று அவர்களிடம் எதையும் திணிக்கவில்லை. அதைச்செய்யவும் நான் விரும்பவில்லை. வாருங்கள் எங்களோடு பங்கேற்றுக்கொள்ளுங்கள். அனைத்து அமைதி முயற்சிகளிலும் விடுதலைப்புலிகளும் பங்கேற்கட்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இன்று கரும்புலிகள்...

மேனன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, வடபோர்முனைக் கட்டளைத்தளபதி லோறன்ஸ் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இதேவேளை, ஆழியவளை மகா வித்தியாலயத்திலும் நேற்று கரும்புலிகள் நாள் ஆரம்பநிகழ்வு நடைபெற்றது.

இதேவேளை, கிளிநொச்சி புதுமுறிப்பு கிராமத்தில் கடற்கரும்புலி கப்டன் பாமினியின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முற்பகல் 11.45 மணியளவில் நடைபெற்றது.

தியாகு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை மாவீரர் பணிமனை நிர்வாக பொறுப்பாளர் இனியவன் ஏற்ற, கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் அருள் தேசியக் கொடியை ஏற்றினார். கடற்கரும்புலி பாமினியின் திருவுருவப்படத்துக்கு அவரது தந்தை பரராஜசிங்கம் சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார்.

மாவீரர் பாமினியின் தந்தையாருக்கு கிராம பயிற்சி ஆசிரியர் இளமாறன் மாலை அணிவிக்க, கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் தவம் நினைவுப்பரிசை வழங்கி கௌரவித்தார்.

இதேவேளை, இன்று மாலை 5 மணியளவில் யாழ்.மாவட்ட கரும்புலிகள் நாள் ஏற்பாட்டுக்குழுவினரால் பளை மத்தியகல்லூரி மைதானத்தில் கரும்புலி மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு நடைபெறவுள்ளது. இதன் பின்னர் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

அத்துடன், ஆழியவளை மகா வித்தியாலயத்திலும் இன்று காலை 9 மணிக்கு கரும்புலி மாவீரர்களின் அஞ்சலி நிகழ்வு நடைபெறவுள்ளது.

நேற்றுக் காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி இளந்தென்றல் நிறுவனத்தின் நடுவப்பணிமனையில் இளந்தென்றல் நிறுவன பொறுப்பாளர் கி.தயாகரன் தலைமையில் கரும்புலிகள் நாள் நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் உள்ளிட்ட தளபதிகள், பொறுப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் கரும்புலிகள் நாள் நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படவுள்ளன.


# பணிநிலை வெற்றிடம்

**1. உதவி ஆசிரியர் -**

(செய்திப் பத்திரிகை ஒன்றில் ஆகக் குறைந்தது இரண்டு வருடங்கள் உதவி ஆசிரியராக கடமையாற்றிய அனுபவம் உள்ளவர்கள் மட்டும்)

**2. அலுவலக செய்தியாளர்கள் - (பயிலுனர்)**

பத்திரிகைத்துறையில் ஆர்வமுடைய க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**3. ஒப்புநோக்குநர் -**

க.பொ.த சாதாரணதரத்தில் தமிழில் விசேட சித்தி பெற்றிருப்பதுடன், க.பொ.த உயர்தரத்தில் தமிழை ஒரு பாடமாக எடுத்து தேர்ச்சி பெற்றிருத்தல் விரும்பத்தக்கது.

தகைமையுடையவர்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக

**பணிநிலை வெற்றிடம்,**
**நமது ஈழநாடு,**
**267, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

-நிர்வாக இயக்குநர்.



MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# ராம்கோ சீமெந்து
# RAMCO CEMENT

SLS - 107 அங்கீகாரம் பெற்றது
ISO -9002 தரம் பெற்றது
BSS - 12 - 1991 தரத்திற்கு அமைவானது
(பிரித்தானிய தரத்திற்கு அமைவானது)

யாழ்.மக்களின் ஏகோபித்த பாவனையில் உள்ள 100 வீதம் OPC யை உள்ளடக்கிய நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்த போட்லாண்ட் சீமெந்துகள் மொத்த விலை - 700/- ஆகவும் சில்லறை விலை 720/- ஆகவும் விற்பனை செய்யப்படுகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கும், பாவனையாளர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

தொடர்புகளுக்கு :
ஈஸ்வரபகவான் அன் கம்பனி,
இல.91 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 - 222 2350

[C/5442]


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 05.07.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.